R.R.NO. 4442/65
MADRAS RECORD OFFICE
6145/L
6 - DEC 1965
MADRAS

மேழிச்செல்வம்

25 பை

விசுவாவசு ௵ கார்த்திகை ௴

1965

(9—10—1695 அன்று Y.W.C.A.-வில் நடந்த காய்கறிச் செடி நடுதல், பாதுகாப்பு நிதி வழங்கல் நிகழ்ச்சியின் படங்கள்.)



விவசாய அமைச்சர் திரு P. கக்கன் அவர்கள் விழாவில் உரை நிகழ்த்துகிறார்கள்.

தேசீயப் பாதுகாப்பு நிதிக்காக அளிக்கப்படும் பொருள்களை சுகாதார அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் பெற்றுக் கொள்கிறார்.



திருமதி கக்கன் அவர்கள் விழாவின் போது காய்கறிச் செடி நடுகிறார். Y.W.C.A. தலைவி திருமதி சந்திரன் அருகில் இருக்கிறார்.

தொழில் பயிற்சிக் கூடங்களில் விவசாயக் கருவிகள் பழுதுபார்க்க அனுமதி.

மருந்து தெளிப்பான்கள், தூவிகள், இதர விவசாயக் கருவிகளை தொழில் பயிற்சிக் கூடங்களில் பழுது பார்த்துக் கொள்ள 1965-ம் வருட செப்டம்பர் 22-ம் தேதியிட்ட சென்னை அரசாங்க தொழில் துறை ஆணை எண் 4537-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு—பயிற்சித் துறை நெறியாளரின் ஆலோசனைப்படி கீழ்க்கண்ட இடங் களில் உள்ள தொழில் பயிற்சிக் கூடங்களில் விவசாயக் கருவிகளை பழுது பார்த்துக் கொள்ளலாம்:—

பிராட்வே (சென்னை); காட்பாடி, திருவண்ணாமலை, (வடஆற்காடு); கடலூர், உளுந்தூர்பேட்டை(தென் ஆற்காடு); நாகப்பட்டினம், தஞ்சாவூர் (தஞ்சாவூர் மாவட்டம்); திருச் சிராப்பள்ளி, அரியலூர், புதுக்கோட்டை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்); திண்டுக்கல், மதுரை, (மதுரை மாவட்டம்); பரமக்குடி, விருதுநகர் (ராமநாதபுரம் மாவட்டம்); பேட்டை (திருநெல்வேலி); தாராபுரம் (கோயம்புத்தூர்); சேலம், மேட்டூர், ஹோசூர் (சேலம் மாவட்டம்); கூனூர் (நீலகிரி மாவட்டம்).

அரசினர் துறைகளைச் சேர்ந்தவர்களும், தனிப்பட்டவர் களும் அருகிலுள்ள தொழில் பயிற்சிக் கூடங்களின் முதல்வர்களுடன் தொடர்பு கொண்டு தங்களுடைய விவ சாயக் கருவிகளை பழுது பார்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறு பழுது பார்க்கப்படும் கருவிகளில் புதிய பாகங்கள் ஏதேனும் பொருத்தப்பட்டால், அதற்குண்டான கிரயத்துடன் 25 சதவிகித சென்டேஜ் தொகையும் சேர்த்து வசூலிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் துறையினரும், தனிப்பட்டவர்களும் தங்கள் விவசாயக் கருவிகளை அருகிலுள்ள தொழில் பயிற்சிக் கூடங்களில் பழுது பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

உள்ளுரை

	பக்கம்
விவசாயிகளுக்கான சலுகைகளும் கடன் வசதிகளும்.	5
பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீரைக் கொண்டு வீரிய ஒட்டுச் சோளம் சாகுபடி	7
கருமபில் உள்ள பற்றுக்குறை நோய் களும் அவற்றைத் தடுக்கும் முறை களும்	8
விவசாயச் செய்திக் கதிர்	11
கரும்பு விளைச்சல் போட்டி	12
மானவாரி சோள விளைச்சலை கண்ணாடி யிலைப் பருவத்திலேயே அறிய முடியுமா ?	14
கேள்வியும் பதிலும் ..	15
பச்சை வாழை வகையில் ஒரு புதுவகை	18
வானொலிச் செய்திகள் ..	20
குழாய்க் கிணறுகள்	24
தென்னந்தோப்பு பராமரிப்பு	24
புகையிலைத் தீவிர சாகுபடித் திட்டம்	26
1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதக் கால நிலை அறிக்கை.	29

விளம்பரங்கள்

டைதேன் இஜட்-78 ..	4
பொட்டாஷ் ..	9
அமெரிக்கன் ஸ்பிரிங்ஸ் ஓர்க்ஸ் ..	13, 25
டாடா பைஸன்	17
நீர் ஊற்று நிபுணர் ..	28
ராஜா பண்ணைத் தோட்டம் ..	30



ப்ளைட்ஸ், டவுனி மில்ட்யூ மற்றும் ஆன்த்ரக்னேஸ் ஆகியவற்றிலிருந்து காப்பது

டைதேன் இஜட்-78

இப்பொழுது இந்தியாவில் தயாரிப்பவர்கள் இண்டோஃபில் கெமிகல்ஸ் லிமிடெட்
விநியோகிப்பவர்கள் டாடா பைஸன் ராலீஸ்

தக்க பாதுகாப்பின்றி ஆண்டுதோறும், நாடு முழுதும் உருளைக் கிழங்கும், திராட்சைக் கொடிகளும் பழுதாகிவிடுகின்றன. குறிப்பிட்ட நோய்களினின்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கெனவே விசேஷமாகத் தயாரிக்கப்படும் காளான் கொல்லியான டைதேன் இஜட்-78 நம்பகமானது. தன் பணியைச் சிறப்பாக நிறைவேற்றுகிறது. ப்ளைட்ஸ், டவுனி மில்ட்யூ மற்றும் ஆன்த்ரக்னேஸ் ஆகியவற்றிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கிறது டைதேன் இஜட்-78. அதன் மூலம் மேலும் பெரிய, சிறந்த விளைச்சலுக்கு வழி செய்கிறது. பயிர்ப் பாதுகாப்புக்கு டைதேன் இஜட்-78 ஐ நம்புங்கள்...நம்பிக்கைக்குகந்தது எனப் பேர்பெற்றது!

டைதியோகார்பமேட் காளான் கொல்லிகளின் வளர்ச்சிக்கு முன்னோடிகளான ரோ(ஹ்)ம் & ஹாஸ் கம்பெனியின் கூட்டுறவோடு அசல் டைதேன் இஜட்-78 ஐத் தயாரிக்கிறார்கள் இண்டோஃபில்.

டாடா பைஸன் ராலீஸ் TATA FISON RALLIS

டைதேன் இஜட்-78...அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துகிறது!

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ராலீஸ் இந்தியா லிமிடெட் 21, ராவலின் ஸ்ட்ரீட், பம்பாய்-1

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மலர் 22 | விசுவாவசு ஆண்டு கார்த்திகை மீ 1965—நவம்பர்–டிசம்பர் | இதழ் 11

விவசாயிகளுக்கான சலுகைகளும் கடன் வசதிகளும்

தற்போது நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள உணவுப் பிரச்னையில், எல்லா விவசாயிகளுடைய கடமையும் அவரவர்களுடைய நிலத்தில் தற்போதுள்ள விளைச்சலை விட அதிகப்படியான விளைச்சலை உண்டாக்குவதுதான் என்று கூறினால் அது மிகையாகாது.

உணவு உற்பத்திப்பெருக்கத் திட்டங்கள் வெற்றி அடைய வேண்டுமானால், நவீன விவசாயக் கருவிகளும், தரமான விதைகளும் இரசாயன உரங்கள் போடுதலும், பூச்சி மருந்து களைத் தக்க நேரத்தில் அடித்தலும் வேண்டும். அதோடு மட்டுமல்லாது, சரியான நீர்ப்பாசன வசதிகளும் மிகமிகத் தேவை. இவைகளுக்கு அரசாங்கம் வழங்கும் சலுகைகளைக் காண்போம்.

அதிகப்படியான நிலத்தை டிராக்டர் கலப்பைகளை உபயோகித்து சாகுபடிக்குக் கொண்டு வருவதற்கு ரூ. 20,000 விவசாயிகளுக்கு டிராக்டர் வாங்குவதற்குத் தவணைக் கடனாக கொடுக்கப்படுகிறது. இந்தக் கடனை வருடாந்திரத் தவணையில் விவசாயிகள் திருப்பிக் கொடுக்கவும் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. நவீன கலப்பைகள் அதாவது மேலூர் கலப்பை, இறக்கை கலப்பை இவைகளுக்கு முறையே 25 சதவிகிதமும் 33⅓ சதவிகிதமும் மான்யமாக வழங்குகிறது. இறக்கை கலப்பைகளுக்கு அரசாங்க மான்யத்தின் உச்ச வரம்பு ரூ. 8. தழை அமுக்கும் கருவி, சேறு கலக்கும் கருவி, மண்வாரி போன்ற இதர நவீன கருவிகளை விவசாயிகளுக்குப் பாதி விலைக்குக் கொடுக்கப்படுகின்றது.

விவசாயிகளுக்கு கொடுப்பதற்காக, விவசாய ஆராய்ச்சி நிலையத்திலும், அரசாங்க விதைப்பண்ணையிலும், உயர் தரமான நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, போன்ற தானியங்களின் விதைகளும், இதர பயிர்களின் பொறுக்கு விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு, பிறகு கிராம சகாயக்குகள் பண்ணையில் பெருக்கப்படுகின்றன.

அதன் காரணமாக, கிராம சகாயக் ஒரு குவிண்டால் அதாவது நூறு கிலோ நல்ல பொறுக்கு விதை விநியோகித்தால் ரூ. 5 மான்யமாக கொடுக்கப்படுகிறது.

நிலக்கடலை விதைகளை பொறுத்தவரை வாங்கின விலை எதுவாக இருந்தாலும், விதைப்பு காலத்தில், நடப்பு விலைக்கே விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிறது. வாங்கின விலை அதிகமாக இருந்து, நடப்பு விலை குறைவாக இருந்தால், அதனால் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளுகிறது.

ஆமணக்கு விதைகளை, நிலக்கடலை, துவரையுடன், கலப்பாக பயிரிடவும் அல்லது வரப்புகளில் பயிர் இடவும் விவசாயிகளை ஊக்குவிக்க, ஆமணக்கு விதைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

கரும்பு உற்பத்தியைப் பெருக்குவதில், தரமான நோயற்ற கரும்பு கரணைகள் முக்கியமென்றால் தவறாகாது. விதை கரணைகளுக்காக நாற்றங்கால் ஏற்படுத்த (Short crop nurseries) விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள் நாற்றங்கால் ஏற்படுத்தும் விவசாயிகள், ஒரு ஏக்கர் நடுவதற்கு கரணைகள் கொடுத்தால் ரூ. 10 கொடுக்கப்படுகிறது இந்த பொறுக்கு விதைக் கரணைகளைப் பெற்றுக் கொள்ளும் விவசாயிகளுக்கு, இவைகளை தங்கள் நிலங்களுக்குக் கொண்டு செல்லும் செலவைக் கணிசமாகக் குறைப்பதற்காக ஒவ்வொரு ஏக்கர் நடும் பொறுக்கு விதைக் கரணைக்கு ரூ. 20 அல்லது ரூ. 40 மான்யமாகக் கொடுக்கப்படுகிறது. இது தூரத்தைப் பொறுத்திருக்கிறது.

காய்கறி விதைகளும், பழச் செடிகளும், பாதி விலைக்கு விற்கப்படுகிறது. தென்னை, பாக்கு மரக்கன்றுகள் முறையே 90 காசு, 13 காசுக்கும், குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது. பசுந்தாள் உர விதைக்கு 15 சதவிகித மான்யம் கொடுக்கப்படுகிறது.

(29-10-65 அன்று திரு எம். எஸ். சேதுராமன், விவசாயநெறியாளரின் அரசிதழ் பதிவுபெற்ற உதவியாளர் அவர்கள் ஆற்றிய வானொலி உரை.)

தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் (Intensive manuring Scheme) குறுகிய கால கடன்கள், குறித்த நேரத்தில் உரமிடுவதற்காக விவசாயிகளுங்கு யின்வரும் விகிதத்தில் கொடுக்கப்படுகின்றன.

	ஒரு ஏக்கருக்கு.	ஒரு நபருக்கு அதிகப் படியாக கொடுக்கும் மொத்தத் தொகை.
	(1)	(2)
	ரூ.	ரூ.
நெல்	48	750
கரும்பு	260	1,000
நிலக்கடலை ..	25 மானாவாரி	500
	50 இறைவை	
பருத்தி	35	350
தென்னை	100	500
பாக்கு	100	500
புகையிலை ..	100	500

இந்த கடன்கள், முழுநிதி உதவிபெறும் இடங்களில், கூட்டுறவு சங்கங்கள் மூலமும், முழுநிதி உதவி பெறாத இடங்களில், வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமும் கொடுக்கப்படுகின்றன.

இந்த கடன்கள், அறுவடைக்குப் பின் திரும்பப் பெறப் படுகிறது. விவசாயிகளின் நிலங்களில், ஒவ்வொரு வருடமும் 12,000 நிரூபண வயல்களை (Demonstration plots) அமைப்பதற்காக இலவசமாக இரசாயன எரு கொடுக்கப் படுகிறது. இதோடு, நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, எள், கரும்பு, காய்கறி, பருத்திப் பயிர்களுக்கு உதவித் தொகை பெற்று நிரூபண வயல்கள் (Subsidised demonstration plots) அதிகப்படியான எண்ணிக்கையில் செய்து காட்டப்படுகிறது. காய்கறி உற்பத்தியை ஊக்குவிக்க தனி விவசாய விளக்குநர்கள் சிபாரிசுகள் பேரில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம், ஒரு ஏக்கருக்கு ரூ. 120 வீதம் குறுகிய கால கடன் கொடுக்கப்படுகிறது.

இரசாயன உரத்தைப் பொறுத்தவரை நம் தாயகத்தில் உற்பத்தியாகும்அளவு, நம் சுய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதென்றால், விலைமதிக்கத் தக்க அந்நிய செலாவணி செலவிடப்பட வேண்டியுள்ளது. எனவேதான் தல எரு வகைகளை (Local manures) அதிகப்படியாக உற்பத்திக்கான வழி முறைகளை நாட வேண்டியவர்களாக இருக்கின்றோம். கிராம கலவை எரு (Rural Compost) உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும். இவ்வுற்பத்தியை அதிகப்படுத்த, ஒவ்வொரு புதிய எருக் குழிக்கும் ரூ. 6 (ரூபாய் ஆறு) மான்யமாகவும், அதைத் தொடர்ந்து ஒவ்வொரு எருக்குழி நிரம்பும் பொழுது ரூ. 3 கொடுக்கப்படுகிறது.

நகர கலவை எரு, நியாய விலைக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. இதனால், ஸ்தல ஸ்தாபனத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது.

வன இலாகா, காடுகளிலுள்ள பசுந்தழைகளை, விவசாயிகள் அதிகமாக உபயோகிக்கும் பொருட்டு சொற்ப விலைக்கு (Nominal cost) கொடுத்துக் கொண்டு இருக்கிறது.

பயிர்களைப் பாதிக்கும் பூச்சிகளையும், அதனால் ஏற்படும் நோயையும் ஆரம்பத்திலேயே வர ஒட்டாமல் பாதுகாப்பதனால், உற்பத்தி கணிசமாகப் பெருகும் என்பது ஒரு தனிப் பெரும் உண்மையாகும். நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, பாக்கு பயிர்களுக்குப் பூச்சி மருந்துகள் 75 சதவிகித விலைக்கும், பருத்தி, உருளைக்கிழங்கு, நிலக்கடலை, எள், கரும்பு, தென்னை பயிர்களுக்கு 50 சதவிகித விலைக்கும், ஆமணக்கு பயிருக்கு 25 சதவிகித விலைக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பூச்சி மருந்துகளை வயல்களுக்கோ, அல்லது செடி, மரங்களுக்கு, அடிப்பதற்காக பயன்படுத்தும் ஸ்ப்ரேயர்களும், டஸ்டர்களும், விவசாயிகள் சொந்தமாக வைத்திருந்தால், குறித்த நேரத்தில் பயிர் பாதுகாப்பு முறையைக் கையாள ஏதுவாக இருக்கும். எனவே, பாதி விலைக்கு (50 சதவிகித விலைக்கு) ஸ்ப்ரேயர்களும், டஸ்டர்களும் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. நெற்பயிர், அல்லது வேறு ஏதாவது உணவுப் பயிர், பூச்சியாலும், நோயாலும் அதிகமாக பாதிக்கப்பட்டால், அந்த மண்டலமே பயிர் பூச்சிகளால் பாதிக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டு, சாதாரணமாக, 75 சதவிகிதத்தில் விற்பனை செய்யப்படுகிற பூச்சி மருந்துகள் 50 சதவிகிதத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

நிலக்கடலை பயிரை பாழாக்கும் சிவப்பு கம்பளிப் பூச்சிகளின் தொல்லையை ஒழித்து, பயிரைப் பாதுகாக்க, பூச்சி மருந்து வாங்குவதற்காக உடனடிக் கடன்கள் (Spot loans) கொடுக்கப்படுகிறது.

நம் மாநிலத்தில், ஆற்றுப் பாசன வசதிகள் முழுவதும் பயன்படுத்தப் பட்டுவிட்டன. எனவே, கிணறுகள், நீர் ஊற்றுகள் மூலம், நீர்பாசனத்திற்குத் தண்ணீர் பெறுவதற்கான வழிமுறைகளைக் கண்டாக வேண்டும். இதன் காரணமாகத்தான், சாதாரண கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்கள், இவைகள் அதிக அளவில் ஏற்படுத்த நீண்டகால கிணறு வெட்டும் கடன்கள் கொடுக்கப்படுகிறது. வட்டார வளர்ச்சி அலுவலர் மூலமாக, சாதாரண கிணறு வெட்ட, ஒவ்வொரு கிணறுக்கும் ரூ. 5,000 வரையில் கடன் கொடுக்கப்படுகிறது. இதில் 25 சதவிகிதம் மான்யம், மீதி கடன். மான்யத்தின் உச்ச வரம்பு ரூ. 500. கடன் தொகையின் அளவைப் பொறுத்து, 10 அல்லது 15 வருடாந்திர தவணையில் வசூலிக்கப்படுகிறது. விவசாய இலாக்காவின் மூலம், குழாய்க்கிணறுகள் தோண்டப்படுவதற்குக் கடனாக ரூ. 8,000-மும், அதில் மான்யமாக 10 சதவிகிதமும் கொடுக்கப்படுகிறது. மான்யத்தின் உச்ச வரம்பு ரூ. 500. இந்தக் கடன்கள் 5 அல்லது 7 வருடாந்திரத் தவணையில் கடன் தொகையின் அளவினைப் பொறுத்து வசூலிக்கப்

[10-ம் பக்கம் பார்க்கவும்.

பரம்பிக்குளம் ஆளியாறு தண்ணீரைக் கொண்டு வீரிய ஒட்டுச் சோளம் சாகுபடி

எஸ். பி. வெங்கிடசாமி செட்டியார், கோட்டூர்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட (P. A. P.) பாசனத்தைக் கொண்டு நான் புஞ்சை சாகுபடி செய்கிறேன். இதற்கு முன் நான் மானாவரிப் பயிர்களையே போட்டேன். இவ்வருடம் போதிய மழை பெய்யாத காரணத்தால் நான் சோளத்திற்கு ப.ஆ. திட்ட (P.A.P.) நீர் பாய்ச்சி ஓளவு நல்ல மகசூல் கிடைக்கப் பெற்றேன்.

பயிரைப் பார்வையிடும் விவசாய அலுவலருடன் விவசாயி.

தற்போது எனது நிலத்தின் சர்வே எண் 751-ல் 3 ஏக்கர் ப.ஆ.தி. மாதிரிப் பண்ணைக்கு விடுத்துள்ளேன். இதில் ப.ஆ.தி. யுடன் இணைந்துள்ள விவசாய நிபுணர்கள் கூறியபடி நிலத்தை நன்கு உழுது புழுதியாக்கி கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி தொழு உரம் இட்டு இரண்டு மூட்டை இரசாயன உரம் மிக்சர் எண் I தூவிய பிறகு, 15″—18″ இடை வெளியில் சால்பிடித்து C.S.H.I. வீரிய ஒட்டுச் சோள விதை போட்டேன். எனக்கு ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை பிடித்தது; உடனே ஒரு உயிர் தண்ணீர் பாய்ச்சினேன். பின் 23 நாட்களில், நீர் பாய்ச்சிய பின் கொத்துக்களை எடுத்த பிறகு, மிக்சர் எண் 10 இரண்டு மூட்டை போட்டு நீர் பாய்ச்சினேன். பின்பு 48 நாட்களில், இன்னும் இரண்டு மூட்டை மிக்சர் எண். 10 போட்டு தண்ணீர் பாய்ச்சினேன். விதைத்த 60-வது நாளில் கதிர் பூச்சி விழவே பி. எச்.சி. 10 சதவீதம் ஏக்கருக்கு 10 கிலோ வீதம்தூவினேன். இன்னும் அதிக பூச்சி இருக்கவே இன்னும் மூன்றுதரம் பி. எச். சி. 10 சதவீதம் தூவினேன்.

இறுதியாக 105-வது நாளில் அறுவடை செய்தேன் எனக்கு ஏக்கருக்கு 2,000 கிலோ (20 மூட்டை) மகசூல் கிடைக்கப்பெற்றேன். செலவு போக எனக்கு ஏக்கருக்கு ரூ. 800 இலாபம் கிடைக்கப்பெற்றேன். ப. ஆ. தி (P. A. P) பாசனம் இல்லாமல் மழையையே நம்பிய விவசாயிகள் பெருத்த ஏமாற்றம் அடைந்துள்ளார்கள்.



கதிரின் தோற்றம்.

இதிலிருந்து வீரிய ஒட்டு விதைகள் சாகுபடி செய்து மேற்சொன்னபடி நிறைய உரம், தண்ணீர், ஏற்ற காலத்தில் விதைப்பு, பயிர்ப் பாதுகாப்பு போன்றவற்றை கடைப் பிடித்தால் அதிக மகசூலை அடையலாம் என்பதை திட்ட வட்டமாகக் கூறுகிறேன்.

வீரம் விளையும் இடம் போர்முனை; விளைச்சல் பெருகும் இடம் ஏர்முனை.

கரும்பில் உள்ள பற்றுக்குறை நோய்களும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

ந. ஜலில் அகமது, து. பத்மநாபன், பூசண இயல் பிரிவு, மத்திய கரும்பு ஆராய்ச்சி நிலையம், கடலூர்.

கரும்பு பயிர்கள் செழித்து வளர்ந்து விளைச்சலைத் தருவதற்கு தழைச்சத்து (Nitrogen), மணிச்சத்து (Phosphorus), சாம்பல் சத்து (Potash), ஆகிய மூன்று உணவுச் சத்துக்கள் அடங்கிய இரசாயன உரங்கள் மிகவும் இன்றியமையாதவை. இவைகள் பேருட்டகங்கள் என்றும் கூறப்படுகின்றன. பயிர்களின் தேவையறிந்து மண்ணின் தன்மைக்கேற்ப இம்மூவகை சத்துக்களையும் விவசாயிகள் பயன்படுத்தி வருகிறார்கள். இவைகளைத் தவிர இரும்பு, மாங்கனீசம், செம்பு, துத்தநாகம், போரான் போன்ற முக்கிய மூலகப் பொருள்களும் மிகக் குறைந்த அளவில் பயிர்களின் வளர்ச்சிக்கு அவசியமாகும். இவைகள் நுண்ணூட்டகங்கள் அல்லது சிறு மூலகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நுண்ணூட்டகங்கள் பயிர்களின் தேவைக்கு அதிகமாக இருந்தாலும் அல்லது குறைந்து இருந்தாலும் பயிர்களின் வளர்ச்சிக்கு பெரிதும் ஊறு விளைவிக்கின்றன. இறுதியில் பெரும்பாலும் பயிர்கள் வெளுத்து வளர்ச்சி குன்றி காணப்படுகிறது. தமிழ் நாட்டில் கரும்பு பயிரில் சாதாரணமாகக் காணப்படும் போஷணக்குறை நோய்களின் அறிகுறிகளையும் அவற்றைத் தடுக்கும் முறைகளையும் கீழே ஆராய்வோம்.

நமது விவசாயிகள் கரும்பு பயிருக்கு தழைச் சத்து மிகுந்த அம்மோனிய உரங்களை அதிக அளவில் உபயோகிப்பதால் இச்சத்து பற்றுக் குறைநோய் அதிகம் காணப்படுவதில்லை. நீண்ட காலமாக சரிவர உரமிடப் படாத வளங்குறைந்த நிலங்களில் இந்நோயின் அறிகுறிகள் தென்படுகின்றன. பயிர்களில் இப்போஷணக்குறை நோயின் அறிகுறிகளைப் பார்த்து எளிதில் தெரிந்து கொள்ளலாம். முதலில் இலைகளில் பசுமை நிறம் மங்க ஆரம்பிக்கிறது. பின்பு எல்லா தோகைகளும் ஒரே மாதிரியாய் பசுமை இழந்து வெளிறிய மஞ்சள் நிறத்தை அடைகிறது. கரும்பின் கணுப்பாகங்கள் சிவந்து விடுவதுடன் கரும்பின் வளர்ச்சி தடைப்பட்டு விடுகிறது. இப் போஷண குறையினால் வாடுகின்ற பயிர்களில் தழைச் சத்து மிகுந்த அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களை வைப்பதின் மூலம் குறை உடனடியாக நிவர்த்திக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் கரும்பு பயிரிடுகின்ற மாவட்டங்களின் மண் வளத்திற்கேற்ப ஆலை வட்டாரங்களில் பயிருக்குத் தேவையான எருக்களின் அளவு கீழே கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தழைச்சத்து அடிப்படையில்.

தென்னாற்காடு	250 ராத்தல்.
திருச்சி, தஞ்சாவூர்	200-லிருந்து 250 ராத்தல் வரை.
மதுரை, கோயம்புத்தூர்.	150 ராத்தல்

வெல்லம் காய்ச்சுகின்ற இடங்களில் கரும்பு பயிருக்கு சுமார் 150 ராத்தல் தழைச்சத்து சிபாரிசு செய்யப்படுகிறது. ஏனெனில் தழைச்சத்து அதிகம் இடுகின்ற கரும்பு பயிரிலிருந்து வெல்லம் சீராக கிடைப்பதில்லை.

நுண்ணூட்டகங்கள் (Trace elements)

கரும்பு பயிரில தமிழ் நாட்டில் இரும்பு, மாங்கனீசம், கந்தகம் போன்ற ஊட்டகப் பொருள்களின் பற்றுக்குறையின் அறிகுறிகள் சிற்சில இடங்களில் காணப்படுகிறது. கந்தக பற்றுக்குறையின் அறிகுறிகள் சாதாரணமாய் எங்கும் தென்படுவதில்லை. இதுவரை கோவை மாவட்டத்தில் ஒரே ஒரு கிராமத்தில்தான் கந்தக குறைபாடு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கரும்பு பயிரில் இரும்பு சத்து பற்றுக்குறை நோயினால் குளோரசிஸ் (Chlorosis) என்னும் வெளுப்பு நோய் பல வட்டாரங்களில் அடிக்கடி காணப்படுகிறது.

இரும்புச்சத்து (Iron)

பசுமையான இலைகளில் உள்ள பசுங்கணிகம் (Chlorophyll) என்னும் உயிர்ச்சக்தியை பயிர்கள் அடைவதற்கு இரும்பு சத்து மிகவும் இன்றியமையாதது. இச்சத்துக் குறைவினால் குளோரசிஸ் என்னும் போஷணக் குறை நோய், சுண்ணாம்புசத்து மிகுந்துள்ள இடங்களில் உள்ள கரும்பு பயிரிலும் (Lime induced Chlorosis) கட்டைப் பயிரிலும் (Ratoon Chlorosis) அதிகமாகக் காணப்படுகிறது. இருவகைகளிலும் நோயின் அறிகுறிகள் ஒரே மாதிரியாகும். போஷன குறையின் அறிகுறிகள் முதலில் குருத்து இலைகளில்தான் தென்படுகிறது. குருத்து இலைகளில் பட்டை பட்டையாக நீண்ட மஞ்சள் நிறம் கலந்த வெளுத்துப்போன கோடுகள் இருப்பதைக் காணலாம். நாளடைவில் இலைகள் முழுவதும் திட்டு திட்டாக வெளுத்து பின்பு பூராவும் வெளுத்து விடுகிறது. பயிர்களின் வளர்ச்சியும் குன்றிவிடுகிறது. இச்சத்து பற்றுக் குறை மிகவும் அதிகமாக இருக்கும் இடங்களில் பயிர்களில் இலைகள் பச்சை நிறத்தை முழுவதும் இழந்து வெளுத்துக் காணப்படுகிறது. நாளடைவில் பயிர்கள் கருகி விடுகின்றன. ஏனெனில் மண்ணில் இருக்கும் இரும்பு சத்து பயிர்களுக்கு கிட்டாத நிலையில் இருக்கிறது.

சுண்ணாம்பு சத்து மிகுந்துள்ள இடங்களில் பயிர்களை சீராக வளர்க்க கீழ்கண்ட தகுந்த வழி முறைகளை கையாளுவதின் மூலம் நிரந்தர பயன் அடையலாம். நிலத்தை உழுது நீர் பாய்ச்சி, தண்ணீரைத் தேக்கி நில மட்டத்தில் படிந்துள்ள சுண்ணாம்பு சத்தை பூமியின் அடிப்பாகத்திற்கு கரைந்தோடச் செய்யவேண்டும். கரும்பு பயிருக்கு முன் நெற்சாகுபடி செய்வதன் மூலம் சுண்ணாம்பு சத்தை கரைந்தோடச் செய்து கரும்பின் விளைச்சலைப் பெருக்கலாம் என்பது அனுபவ பூர்வ

"நில வளத்தைப்
பாதுகாக்க"

பயிர்களால் எடுத்துக் கொள்ளப்படும்
உணவு சத்துக்களை திரும்பவும்
அளிக்க வேண்டும்.

பயிர்களுக்கு அதிகம் நைட்ரஜன்
உரம் மட்டும் உபயோகிப்பதினால்
மண்ணிலிருக்கும் மற்ற சத்துக்கள்
- முக்கியமாக பொட்டாஷ் - வேகமாக
வெளியேற்றப்படுகிறது.
இதனால் நிலத்தின் வளம் குறைகிறது.

உங்கள் நிலத்திலிருந்து அதிக
விளைச்சல் கிடைக்க வேண்டுமாயின்,
நீங்கள் உரமிடும்போது தவறாமல்

பொட்டாஷ்

சேர்க்க
மறந்து விடாதீர்கள்

பயிர்களுக்கு உரமிடுவது சம்பந்தமான இலவச விவரங்கள்,
புத்தகங்கள் மற்றும் ஆலோசனை கிடைக்குமிடம்:

இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜன்ஸி லிமிடெட்
8/9, தம்புசெட்டி தெரு, சென்னை-1

IP.G.23 T

உண்மையாகும். மேலும் ஒவ்வொரு நடவிற்கும் ஏக்கருக்கு சுமார் 10 டன் தொழு உரம் அளித்து வருதல் வேண்டும். பயறுவகைப் பயிர்களை (Legumes) வளர்த்து அதை நிலத்திலேயே மடக்கி உழுதுவிடலாம். கரிமப் பொருள்களை (Organic Matter) அதிக அளவில் இட்டும், இரும்பு, மாங்கனீசம், போரான் போன்ற பயிருக்கு தேவையான சிறு மூலகங்களையும் உரமாக அளிக்க வேண்டும். ஒரு சில நாடுகளில் வெளுப்பு நோயிலிருந்து பயிர்கள் தெளிவடைய தொழிற்சாலை கழிவு உரங்கள் பயன்படுத்தப்படுகிறது. மேலே கண்ட முறைகளை கையாளு வதின் மூலம் காலப் போக்கில் நிலம் திருந்திவிடும் என் பது உறுதி.

இரும்பு சத்து போஷணக்குறையிலிருந்து உடனடியாக பயிர்கள் தெளிவடைய வேண்டுமானால், இரும்பு சத்தை செடிகளின்மேல் நன்றாக தெளிப்பதுதான் சிறந்தவழி. பெர்ரஸ் (Ferrous Sulphate) என்னும் இரும்பு உப்பு சத்தை தண்ணீரில் கரைத்து சுண்ணாம்பு நீருடன் கலந்து இலைகளின் மேல் தெளிக்கவேண்டும். நோயின் அறிகுறி களைக் கண்டவுடன் 5 ராத்தல் பெர்ரஸ் சல்பேட்டும் சுமார் 5 ராத்தல் சுண்ணாம்பும் 100 காலன் தண்ணீரில் கரைக்கவேண்டும். பற்றுக்குறையின் தன்மைக்கேற்ப சுமார் 100-லிருந்து 150 காலன் வரை ஒரு ஏக்கருக்குத் தேவைப்படுகிறது. மாதம் ஒரு முறைவீதம் இரண்டு தடவை மருந்து தெளித்தால் போதுமானது. முதலில் திட்டு திட்டாகவும் நாளடைவில் இலைப்பகுதி பூராவும் பசுமை நிறத்தை அடையும். கட்டைப் பயிர்களில் காணப்படும் வெளுப்பு நோயிலிருந்தும் பயிர்களைக் காப்பாற்ற மேலே கூறியபடி உப்பு கரைசலைத் தெளித்து பற்றுக் குறையிலிருந்து பயிர்களை காப்பாற்றலாம்.

மாங்கனீசம் (Manganese)

தாவரங்களின் ஒளிச்சேர்க்கைக்கு அவசியமான பசுங் கணிகத்தை தயாரிப்பதில் மாங்கனீசம் முக்கிய இடம் வகிக்கிறது. இப்போஷணப் பொருள் கரும்பு பயிர் வளர்ச்சிக்கும் முதிர்ச்சிக்கும் பெரிதும் துணை செய்கிறது. சர்க்கரையின் அளவும் அதிகரிக்க இது உதவுகிறது.

கோவை மாவட்டத்தின் சில பகுதிகளில் கரும்பு பயிரில் மாங்கனீச குறைபாடு இருப்பது தெரியவந்தது. முதலில் சற்றே வெளுத்த மஞ்சள் நிறமுள்ள கோடுகள் பச்சை நிறப்பகுதிகளின் இடைஇடையே திட்டுதிட்டாக தோன்ற ஆரம்பிக்கின்றன. இப்பற்றுக்குறை நோய் மிகக் கடுமையாக இருந்தால் வெள்ளை நிறப்பகுதிகள் பழுத்து இலைகள் காய்ந்து கருகிவிடுகின்றன. இவ்வாறு இலைகளுக்கு அதிக சேதம் ஏற்படுவதால் பயிர் முழுவதும் நோயால் தாக்குண்டு வளர்ச்சி பெரிதும் குன்றிவிடுகிறது. இக்குறைபாடு நீங்கி பயிர் நன்றாக வளர மண்ணின் மூலம் ஏக்கருக்கு 50 ராத்தல் வீதம் கந்தகத்தூளை உபயோகிக்கவேண்டும்.

கந்தகம் (Sulphur)

இப்பற்றுக்குறை நோய் சாதாரணமாக அதிகம் தென் படுவதில்லை. நோயின் ஆரம்பகாலத்தில் காணப்படும் அறிகுறிகள் பெரும்பாலும் தழைச் சத்து பற்றுக் குறையின் அறிகுறிகளையே ஒத்திருக்கும். குருத்து இலைகள் வெளுத்து இலேசான பழுப்பு நிறத்தை அடைந்து விடும். முதிர்ந்த இலைகளும் குறுகி வளர்ச்சி குன்றி விடுகின்றன. கரும்பின் தண்டு பாகங்கள் பருமன் குறைந்து நுனிப்பாகம் சிறுத்துவிடுகிறது. 10 ராத்தல் கந்தகத்தை 100 காலன் தண்ணீரில் கரைத்து 15 நாளைக்கு ஒருமுறை பயிர்களின் மேல் இரண்டு தடவை தெளித்தால், பயிர்கள் இப்பற்றுக்குறை நோயினின்று எளிதில் தெளிந்துவிடும்.

கரும்பு பயிரின் வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் இன்றி யமையாத மூலகப் பொருள்களின் முக்கியத்துவத்தை விவசாய பெருங்குடி மக்கள் தெளிவாக உணர்ந்து பல் வேறு பற்றுக்குறை நோய்களின் அறிகுறிகளைக்கண்டுக் கொண்டு அதனதன் குறைமானத்தை போக்கி அதிக லாபம் அடைவார்கள் என்று நம்புகிறோம்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது. எண்ணெய் பம்பு செட்டுகளும் மின்சார பம்பு செட்டுகளும், தவணை முறைகளில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. வடிமுனைக் குழாய்க் கிணற்றுக்காக பம்பு செட்டு சாமான்கள் வாங்குவதற்காக ரூ. 3,000-த் துக்கு அதிகப்படாமல், கடன் கொடுக்கப்படுகிறது. இதற்கும் ரூ. 150-க்கு மேற்படாமல், மான்யம் கொடுக்கப் படுகிறது. இந்தக் கடன் 5 சமமான வருடாந்திர தவணை யில் திருப்பிக் கட்டவேண்டும்.

பழவகை அபிவிருத்திக்காக, நீண்டகால கடன்கள் கொடுக்கப்படுகிறது. திராட்சை பயிரிட ஒரு ஏக்கருக்கு, ஒரு நபருக்கு ரூ. 600 மற்ற பழவகைகள் பயிரிட ஏக்கருக்கு ஒரு நபருக்கு ரூ. 300 விவசாய இலாகாவினால் கொடுக்கப் படுகிறது. ஒரு நபர் பெறக்கூடிய அதிகப்படியான கடன் ரூ. 2,000 இக்கடன் 5 வருடாந்திர தவணைகளில் திரும்பப் பெறப்படுகிறது. முதல் தவணை, கடன் கொடுத்த ஆறுவது வருடத்திலிருந்து துவங்கும். பழைய பழப் பண்ணைகளின் உற்பத்தியை சரியான பயிர் இடுதல், உர மிடுதல், பயிர் பூச்சியிலிருந்து பயிரை பாதுகாத்தல் மூலமாக, பெருக்க, ஒரு ஏக்கருக்கு ஒரு நபருக்கு ரூ. 65 வீதம், அதிகப்படியாக ரூ. 500, குறைந்த கால கடனாக விவசாய இலாகாவினால் கொடுக்கப்படுகிறது. இக்கடன், ஒரு வருடத்தில் வசூலிக்கப்படும்.

வெளி நாட்டிலிருந்து டாலர்களைச் சம்பாதித்துக் கொடுக்கும் பணப்பயிர், முந்திரி. எனவே, முந்திரி பயி ரிடுவதை அதிகப்படுத்த விவசாயிகளுக்கு ஆர்வத்தை ஊட்ட, ஒரு ஏக்கருக்கு, ஒரு நபருக்கு, ரூ. 80 வீதம் அதிகப்படியான தொகை ரூ. 2,000 நீண்டகால கடனாக, விவசாய இலாகாவால் கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன் 5 சமமான வருடாந்திரத் தவணைகளில் திரும்பப் பெறப் படுகிறது. முதல் தவணை கொடுத்த ஆறுவது வருடத் தில் இருந்து துவங்குகிறது.

இத்தனை வசதிகளும், சலுகைகளும் விவசாயிகளுக்கு உணவுப் பயிர்களும், மற்ற அத்தியாவசியப் பொருள் களும், அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்காகத்தான். இந்தப் போட்டியில் நாம் கண்டிப்பாக வெற்றி காண்போம்.

விவசாயச் செய்திக் கதிர்

K. M. சுந்தரம், R. S. எர்னஸ்ட், விரிவினைப் பகுதி, விவசாயக் கல்லூரி, கோவை.

புதிய ஒட்டுக் கம்பு விதை உங்கள் விளைவை இரட்டிப் பாக்குகிறது.

H.B.1. என்பது ஒட்டுக் கம்பு. (Hybrid Bajra-1).

இந்தப் புதிய வகை ஒரு அமெரிக்க வகைக் கம்பையும், லூதியானாவிலிருந்து கிடைத்த ஒரு வகையையும் ஒட்டுச் சேர்த்ததனால் உண்டானது. இந்த ஒட்டு வகையை வடக்கே பஞ்சாப் பர்நிலம் முதல் தெற்கே தமிழ்நாடு வரை மாறுவாரியாக 1964 முதல் பயிரிட்டுப் பார்த்ததில், இது மற்றெல்லா உள்ளூர் வகைகளைக் காட்டிலும் அநேக மாக இரு மடங்கு விளைவைக் கொடுத்தது. இந்த கம்பு நீர் பாசனத்திலும் அதிக உரமிட்டுப் பயிரிட்டதிலும் மிக அதிக விளைவைக் கொடுத்தது.

சமீபத்தில் தேசிய விளக்கப் பாத்திகள் திட்டத்தின் (National Demonstration Scheme)கீழ்கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள கண்ணம்பாளையம் என்ற கிராமத்தில் ஒரு ஹெக்டேர் (ஏக்கர் 2.47) நிலத்தில் இந்தக் கம்பு பாசனப் பயிராகப் பயிரிடப்பட்டது.

பயிர் 1965-ம் ஆண்டு மே மாதம் நாற்றுவிட்டு, பிடுங்கி நடப்பட்டது, ஒரு ஏக்கர் நடுவதற்கு 2 கிலோ விதை போதும் நாற்றங்காலில் பயிர் 17 அல்லது 18 நாட்கள் இருந்த பிறகு நடப்பட்டது.

இந்தப் பயிர் 85 நாட்களில் அறுவடைக்கு வந்தது.

ஒரு ஹெக்டேருக்கு (2·47 ஏக்கர்) 4375 கிலோ தானியமும், 8052 கிலோ தட்டும் கிடைத்தன.

இந்தக் கம்பின் கதிர்கள் அனைத்தும் ஒரே சமயத்தில் அறுவடைக்கு வருவது ஒரு சிறந்த தன்மை. இந்த காரணத்தால் அறுவடை முழுதும் மற்றக் கம்புகளைப் போல் பல தடவைகளில் இல்லாமல் ஒரே தடவையில் முடித்து விடலாம்.

வாய்க்கால் முறையில் நீர் பாய்ச்சுதல் வாழையில் விளைவை அதிகரிக்கிறது.

" ஆற்றோடு அடித்துக் கொண்டு போகும்போது கூடக் குடிக்கத் தண்ணீர் கேட்டதாம் வாழை "—என்பது ஒரு பழமொழி. ஓரளவு மிகைப்படுத்திக் கூறப்பட்டிருந்தாலும் இது பெரும்பாலும் உண்மை. வாழைப் பயிருக்கு மிக அதிக அளவில் தண்ணீர் தேவை. பெரும்பான்மை யான இடங்களில் வாழைக்கு 8 அல்லது 10 நாளைக்கு ஒரு முறையே தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. தண்ணீர் தேங்கி நிற்பது வாழையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்காது; வடிகால் நன்முறையில் இருப்பது வாழைச் சாகுபடிக்கு மிகவும் அவசியம்.

சமதரையில் வாழை நட்டு நீர் பாய்ச்சுவதைவிட வாழையைப் பார்களில் நட்டு அதன் இருபுறமும் மூன்றடி தூரத்தில் 2 அடி ஆழத்திற்கு வாய்க்கால் வெட்டி அதில் நீர் பாய்ச்சுவது சிறந்தது என்று சோதனைகள் மூலம் தெரியவருகிறது.

வாழைக்கு வாய்க்கால் முறையில் நீர் பாய்ச்சுவதன் அனுகூலங்கள் கீழே தரப்படுகின்றன:—

1. பழக் குலையின் எடை சுமார் 55 சதவிகிதம் அதிகரிக்கிறது.

2. குலையில் பழங்களின் எண்ணிக்கை 16 சதவிகிதம் உயர்கிறது.

3. மரங்கள் விரைவில் பலனுக்கு வருகின்றன. குறிப்பிட்ட பரப்புள்ள நிலங்களில் பாத்தி முறையிலிருந்து வருவதைவிட இம்முறையில் அதிக மரங்கள் ஒரே காலத்தில் பலனுக்கு வந்து குலைவெட்டத் தயாராகின்றன.

4. தண்ணீர் செலவும், கூலிச் செலவும் குறைகிறது.

5. பூசண நோய் தாக்குதல் குறைகிறது.

ஆகையால் உங்கள் வாழைக்கு வாய்க்கால் முறையில் நீர் பாய்ச்சி அதிகப் பயனடையுங்கள்.

சில காய்கறி விதைகளை அதிக நாள் கெடாமல் வைத்திருக்கலாம்.

இவ்வாண்டு விதைக்காமல் நின்றுவிட்ட காய்கறி விதைகளை, அடுத்த ஆண்டு விதைக்க தகுதியுடையவையா என்று தெரிந்துகொள்ள விரும்புவோர் பலர். விதை முளைப்புத் திறனை சோதனை செய்து பார்த்ததில் கொத்தவரை, முள்ளங்கி, பீர்க்கு, பாகல் ஆகிய விதை கள் 15 மாதங்கள் சென்ற பின்னும் 85 சதவிகிதம் முதல் 100 சதவிகிதம் வரை முளைப்புத் திறன் பெற்றிருக்கின்றன என்பது வெளியாயிற்று.

வெவ்வேறு வகை உருளைக்கிழங்குகளுக்கு உரத் தேவை மாறுகிறதா ?

நீலகிரியில் உருளைக்கிழங்கிற்கு நஞ்சநாடு உருளைக்கிழங்கு கலப்பு உரத்தையே பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். வெவ்வேறு வகை உருளைக்கிழங்கிற்கும் உர அளவு பொது வாக மாறுமல் ஒரே அளவிலேயே இடப்படுகிறது. வெவ் வேறு வகைகளுக்கும் தனித்தனியான அளவிலும், முறையிலும் உரமிட வேண்டுமா, அவை உர அளவு முறைகளுக்குத் தகுந்தவாறு விளைவில் மாறுபடு கின்றனவா என்பது ஒரு பிரச்சினையாக இருந்தது.

1960 முதல் 1963 வரை நஞ்சநாடு பண்ணையில் இதைக் கண்டறிய பிரசிடென்ட், பென்க்ரஷன், ஈகர்ஹூமர், கிரேட்ஸ்காட் ஆகிய நான்கு வகைகளையும் வைத்து சோதனை செய்யப்பட்டது. ஒவ்வொரு வகைக்கும் தகுந்த சிறந்த உரத்தை அறிய இந்த சோதனை செய்யப்பட்டது.

N,P,K, ஆகியவை எல்லா வகை உருளைக்கிழங்குகளை யும் ஒரே மாதிரி பாதித்ததே தவிர, ஒவ்வொரு வகையும் தனி மாதிரியில் இயங்கவில்லை. ஆகையால் உருளைக்கிழங்கு

வகைகள் எல்லாம் உரத்திற்கு ஒரே மாதிரி பலனையே அளிக்கின்றன. வெவ்வேறு வகைக்கு வெவ்வேறு வித உரம் தேவையில்லை.

உங்கள் பழைய மாமரங்களுக்குப் புத்துயிர் ஊட்டுங்கள்

மாமரங்கள் நூறுண்டுகளுக்கு மேலும் உயிருடனிருந்து மிகப் பெரிய அளவினதாக வளருகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். 300 ஆண்டிற்குமேல் வயதுடைய மரங்களும் இருக்கின்றன.

பழைய மரங்களில் கனு, மூட்டு, கிளைகளிலும், அடி மரத்திலும் பொந்துகள் உண்டாகின்றன. இந்த பொந்துகளில் மழைநீர் தேங்குவதால், உள் மரமும், பட்டையும் அழுகிப்போய் விடுகின்றன. வருடா வருடம் இம் மாதிரியே நடப்பதால் பொந்து மிகப் பெரிதாகிவிடுகிறது. கிளைகள் காற்றினால் ஒடிந்து விடும்பொழுது, கிளைகள் முறிந்த இடத்தில் உள்ள மரம் பாதிக்கப்பட்டு பொந்துகள் உண்டாகின்றன.

கிழக்குக் காண்டேஷ் மாவட்டத்தில் கலம்சார் என்ற இடத்தில் 300 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட ஒரு மாமரம் இருக்கிறது. அதன் மூன்று கிளைகளில் ஒன்று காற்றில் ஒடிந்து விழுந்து விட்டது. காலக் கிரமத்தில் அதன் அடி மரத்தில் மூன்று முதல் 5 நபர்கள் ஒரே சமயத்தில் புகுமளவிற்கு பொந்து ஏற்பட்டுவிட்டது. இப்படி அழிந்து விடுமோ என்று அஞ்சுமளவிற்கு வந்துவிட்ட மரம் கீழ்க்கண்ட முறையில் காப்பாற்றப்பட்டுவிட்டது:—

பொந்தினுள் இருந்த இறந்து, பாழடைந்து போன கட்டைகள் அனைத்தும் வெட்டியும் செதுக்கியும் எடுத்தெறியப்பட்டன. பிறகு அப்பாகங்களின் மீது மீண்டும் அழுகல் பூசுணம் தாக்காதவாறு தார் பூசப்பட்டது. பின் அப்பொந்து செங்கற்களையும் சுண்ணம்புக்காரையும் கொண்டு மூடப்பட்டது. உள்ளே சிறிதும் சந்தில்லாமல் மூடப்பட்டதும், வெளிப்புறம் நன்றாக சிமெண்டினால் பூசப்பட்டது. இதன் மூலம் அடி மரத்திற்கு நல்ல வலு கொடுக்கப்பட்டது. சிமெண்ட் பூச்சைச் சுற்றி பட்டை வளர ஆரம்பித்தது.

இதே முறையில் பல மரங்கள் வெற்றிகரமாக காப்பாற்றப் பட்டுள்ளன.

கிளை முறிந்த இடங்களை நன்றாக அறுத்து விட்டு அதன் மீது தார் தடவிவிடுவதன் மூலம் உள்மரம் அழுகாதவாறும், பொந்துகள் உண்டாகாதவாறும் தடுக்கமுடியும். இந்த முறையைப் பரவலாக சிபாரிசு செய்யலாம். ஆனால் சூடான தாரை உயிருள்ள மரப் பாகங்களின் மீது பூசக் கூடாது.

பல இடங்களில் வயதான மரங்களும், சில சமயங்களில் இளமரங்களுங்கூட கவனிப்பில்லாமல், நோயுற்றனபோல் பல கிளைகளில் புல்லுருவி வளர்ந்தும், துளை வண்டு துளைத்தும் காணப்படுகின்றன. இத்தகைய தோப்புகளிலிருந்து அவை மிகச் சிறந்த வகைப் பழமரங்களாயினும் நல்ல வருமானத்தை எதிர்பார்க்கமுடியாது.

இத்தகைய தோப்பை நன்றாக உழுது களைகளை அகற்றி, புல்லுருவிகளையும், துளை வண்டுகளையும் அகற்றி கீழ்க்கண்டபடி உரமிட்டுப் புத்துயிர் பெறும்படி செய்யலாம்:—

15 முதல் 20 ஆண்டு வயதுள்ள ஒரு மரத்திற்கு 20 ராத்தல் எலும்புத்தூள், 200 ராத்தல் குப்பை எரு, 5 ராத்தல் பிண்ணாக்கு—இந்த அளவு மரத்தின் வயதிற்கும் வளர்ச்சிக்கும் தக்கபடி மாறலாம்.

கரும்பு விளைச்சல் போட்டி

1964–65-ல் நடத்தப்பட்ட முக்கிய பட்டத்துக்கான கரும்பு விளைச்சல் போட்டியில் கீழ்க்கண்டவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்:—

பரிசு பெறுபவர்.	பயிர் செய்த கிராமம்.	கரும்பு ரகம்.	ஏக்கர் விளைச்சல் டன். கிலோ.
I. நியூ ஹோரிஜான் சர்க்கரை ஆலைப்பகுதி.			
1. ஆலைப் பகுதி			
திரு. வி. ஜயராம ரெட்டியார், புதுக்கடை கிராமம், கடலூர் வட்டம்.	புதுக்கடை	கோ.658	107—032
2. கடலூர் வட்டம்			
திரு. என். சி. முத்து கிருஷ்ண ரெட்டியார், செல்லஞ்சேரி, கடலூர்.	செல்லஞ்சேரி.	கோ.658	97—[illegible]
3. விழுப்புரம் வட்டம்			
திரு. டி. நடராஜன், கோண்டூர் விழுப்புரம் வட்டம்.	கோண்டூர்.	கோ.658	72—468
II. பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலைப் பகுதி			
1. மாவட்டப் பரிசு			
திரு. எஸ். கந்தசாமி உடையார், மேல்கொண்டார் கோட்டை.	கீழ்கல்கொண்டார்கோட்டை.	கோ. 419	111—722
2. குளித்தலை வட்டம்			
திரு. கா. உத்தண்டன், பிச்சம்பட்டி.	கிருஷ்ண ராயபுரம்.	கோ. 449 (நடவு).	91—526
3. திருச்சிராப்பள்ளி வட்டம்			
திரு. டி. எஸ். ஆரோக்கியசாமி பிள்ளை, சிராப்பட்டி.	சிராப்பட்டி.	கோ. 419 (நடவு).	86—105

‘மாருத்’ சார்ஜ் பம்ப்பும் ஸ்ப்ரேயரும்

கோயமுத்தூர் விவசாய பாதுகாப்பு நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டதும்
சென்னை விவசாய டைரக்டரால் ஏற்றுக்கொண்டதும்.
(No. C-1, 40404/64—21-4-64.)



குணங்கள் :

1. சராசரி அழுத்தத்தில் வேலை செய்யத் தகுதியான ஆப்பரேட்டரில் ப்ரெஷர் ரெகுலேட்டர் அமைந்துள்ளன.
2. ஒழுகுவதைத் தடுக்க ஸ்ப்ரே லான்ட்ஸில் கைவிரல்களால் கட்டுப்படுத்த ஸ்ப்ரேயர் அமைந்துள்ளன.
3. ஸ்ப்ரேயர் எஃகு தட்டினால் செய்யப்பட்டவை.
4. ஸ்ப்ரேயரின் மேல் தொட்டியில் பாதுகாப்பு வால்வு அமைக்கப்பட்டுள்ளன. டெலிவரி குழாய் 1·5 மீட்டர் நீளம் உள்ளன.
5. 61 c. m. எக்ஸ்டென்ஷன் ஒரு பக்கம் வாத்து கழுத்து போன்று வளைந்த ராடும் ஸ்ப்ரே நாஸிலும் சேர்ந்தவை.



மாருத் சார்ஜ் பம்ப்
ரூ. 280

‘மாருத்’
நீடித்த அழுத்த சக்தியோடு
முதுகில் சுமந்து செல்லக்
கூடிய ஸ்ப்ரேயர்.

18 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 290
பித்தளையினால் செய்யப்பட்டது
ரூ. 230

14 லிட்டர் அளவு கொண்டது:
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
ரூ. 280
பித்தளையினால் செய்யப்பட்டது
ரூ. 230



தயாரிப்பாளர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,
மலாட், பம்பாய்-64.

சென்னை, மைசூர் வினியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
தபால் பெட்டி எண். 539
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், பெங்களூர்-2

மானவாரி சோள விளைச்சலை கண்ணாடியிலைப் (Flag leaf) பருவத்தி லேயே அறிய முடியுமா?

(சி. பாலசுப்பிரமணியன், இரா. ஜானகிராமன், விவசாயக் காலநிலைப் பிரிவு, கோயமுத்தூர்.)

நாகரீகம் தோன்றிய காலம் முதற்கொண்டு நாகரீகத்தின் சின்னமாக ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கொடி (Flag) இருந்து வருகிறது. தெய்வ வழிபாட்டிலும் கூட பல்வேறு மதத்தினர் தத்தம் மதக் கோட்பாட்டிற்கேற்ப பலவிதமான கொடிகளை கோவில்களிலும் பள்ளிவாயில்களிலும் உபயோகிக்கின்றனர்.

தாவர வர்க்கங்களிலும் குலை, கதிர் முதலியவற்றை உள் அடக்கித்தோன்றும் கண்ணாடியிலை (Flag leaf) ஒரு நாட்டின் கொடியையோ அல்லது மதத்தின் கொடியையோ ஒத்ததாக இருக்கிறது. கண்ணாடியிலை தோன்றும் சமயத்திலுள்ள ஒரு செடியின் வளர்ச்சியையொட்டித்தான் அந்த செடியினின்று கிடைக்கும் தானிய மகசூலும் தீவன மகசூலும் இருக்கின்றது. சோளத்தைப் பொறுத்த வரையில் செடியின் வளர்ச்சியென்பது செடியின் உயரத்தையும், செடியில் காணப்படும் இலைகளின் எண்ணிக்கையும், தண்டில் காணப்படும் கணுக்களின் எண்ணிக்கையும் குறிப்பதாகும்.

கோவையில் மானவாரி பூமிகளில் சாகுபடியாகும் பெரிய மஞ்சள் (கோ–1) சோளத்திலும் தலைவிரிச்சான் (கோ–3 அல்லது கோ–19) சோளத்திலும் 1953–ம் ஆண்டு முதல் நடத்திய விவசாயக் காலநிலை ஆராய்ச்சியிலிருந்து கண்ணாடியிலைப் பருவத்தின் முக்கியத்துவம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வருடாவருடம் இவ்விரண்டு ரகச் சோளங்களிலும் விதைத்த மூன்றும் வாரம் 24 செடிகளை ஒவ்வொரு ரகத்திலும் பொறுக்கி அவைகளுடைய உயரம், இலைகளின் எண்ணிக்கை, கணுக்களின் எண்ணிக்கை வாரா வாரம் நிர்ணயிக்கப்பட்டன. அறுவடை சமயத்தில் ஒவ்வொரு செடியின் தானிய மகசூலும் தட்டு மகசூலும் கணக்கெடுக்கப்பட்டன.

பத்து வருடங்களில் (1953 முதல் 1962 ஈராக) சேகரித்த புள்ளி விவரங்கள் கணிதரீதியில் பரிசீலனை செய்யப்பட்டன.

பயிர் ஆயுட்காலத்தை வளர்ச்சிப் பருவம், (கண்ணாடியிலை தோன்றும் தருணம்) பூப்பருவம (கண்ணாடியிலை தோன்றின மூன்றும் வாரம்), முதிர்ச்சிப் பருவம் (அறுவடை வாரம்) என மூன்று பருவங்களாகக் கருதப்பட்டது. ஒவ்வொரு ரகச் சோளத்திலும் இந்த மூன்று பருவங்களைத் தழுவிய புள்ளி விவரங்களையும், தானிய மகசூல் விவரங்களையும் கொண்டு அவைகளிலுள்ள இணைப்புகள் கணிதரீதியில் நிர்ணயிக்கப்பட்டன.

மேற் கூறியவாறு இணைத்துப் பார்த்ததில் இரண்டு ரகச் சோளங்களிலும் கீழ்க்கண்ட உறவுகள் புலனாயின.

(அ) கண்ணாடியிலைப் பருவத்தில் காணப்படும் இணைப்புகள் பின் தொடர்ந்து வரும் இரண்டு பருவங்களிலும் அதே ரீதியில் சற்றேறக்குறைய கோ–1 ரகத்தில் காணப்படுகின்றன. ஆனால் கோ–3 அல்லது கோ–19 ரகத்தில் இவைகள் சற்று மாறுபடுகின்றன.

(ஆ) தானிய மகசூல், தீவன மகசூல் இவையிரண்டும் பயிரின் உயரத்தையும், இலைகளின் எண்ணிக்கையையும் ஒட்டி இருக்கின்றன.

(இ) கணுக்களின் எண்ணிக்கை அதிகமானால் பொதுவாக தானிய மகசூல் குறைவாகவும், தீவன மகசூல் அதிகமாகவும் இருக்கும்.

இந்த மூன்று பயிர் வளர்ச்சி அம்சங்களுடைய கூட்டு இணைப்பைக் கருதும்பொழுது, அது தானிய மகசூல், தீவன மகசூல் இவற்றுடன் எந்த சத விகிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்ற புள்ளி விவரங்கள் கீழ்கண்ட முறையில் தெளிவாயின:—

பருவக் குறிப்பு.	கோ-1		கோ-3 அல்லது கோ-19	
	தானியம்.	தீவனம்.	தானியம்.	தீவனம்.
வளர்ச்சிப் பருவம்	52	35	32	34
பூப் பருவம்	52	36	35	25
முதிர்ச்சிப்பருவம்	52	34	30	30

இந்த அட்டவணையிலிருந்து மேற்கூறிய மூன்று செடி அம்சங்களின் சராசரி கூட்டு இணைப்பு பின்வருமாறு இருக்கிறது :—

	தானியம்.	தீவனம்.
கோ—1.	52	35
கோ-3 அல்லது கோ–19.	32	30

கோ–3 அல்லது கோ–19 ரகச் சோளத்தில் தட்டு மகசூல் தவிர மற்ற மகசூல்களை கொடியிலை (Flag leaf) தோன்றும் பருவத்திலுள்ள செடியின் உயரத்தைக் கொண்டும், செடியில் காணப்படும் இலைகள், கணுக்கள் எண்ணிக்கைகளை கொண்டும் மேற்கூறிய சத விகிதத்தில் நிர்ணயிக்கக் கூடும்.

இது விஷயமாக தொடர்ந்து நடத்தப்போகும் ஆராய்ச்சித் திட்டத்தில் அடித்தண்டின் கனம், அடிக்கணுக்களின் இடைவெளியளவு, இவைகளைப் போன்ற செடியம்சங்களின் புள்ளிகளையும் சேகரித்தால் இன்னும் அதிக நுட்பமான முறையில் சோளரகங்களின் தானிய தீவன மகசூல்களை கொடியிலைப் பருவத்திலேயே சிறந்த முறையில் முன் கூட்டியே அறியப்பயன்படும்.

உழவர் உழைப்பு செறுபகை ஓட்டும்.

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயம்புத்தூர்-3" என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

ச. சுப்பையன், முறம்புக்காடு, ராசிபுரம் வட்டம்.

கே: நெற்பயிருக்கு களை நாசினிகள் உபயோகப்படுத்தலாமா? அதன் முழு விபரம் தேவை.

ப: நெற்பயிரில் காணப்படும் அகன்ற இலைகளுடைய களைகளை (உதாரணமாக மார்சிலியா) 2·4 டி என்ற களைக் கொல்லியை எக்கருக்கு ஒன்று முதல் இரண்டு கிலோ மருந்தை சுமார் 50 அல்லது 60 காலன் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பதன் மூலம் ஒழிக்க முடியும். இந்தக் களை கொல்லியால் குறுகிய இலைகளை உடைய களைகளை (உதாரணமாக அருகம் புல், கோரைப்புல்) அழிக்க முடியாது. குறுகிய இலைகள் கொண்ட களைகளை கொல்வதற்கென்று தனியாகக் கிடைக்கும் களைக் கொல்லிகளை (உதாரணமாக டௌபான்) நெற்பயிரில் உபயோகப்படுத்த முடியாது. ஏனெனில் நெற்பயிரும் இந்தக் களைக் கொல்லியால் பாதிக்கப்படும்.

குறிப்பிட்ட களைகளை ஒழிப்பது எப்படி என்பதற்கான விபரங்களுக்கு தாவர நிபுணர், விவசாயக் கல்லூரி, கோயமுத்தூர்–3 என்ற முகவரிக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

கே: ஆடுதுறை 27 குறுவை நெல் $2\frac{1}{2}$ கிலோ விதை சேகரம் செய்து வைத்துள்ளேன். அதை நாற்றுவிட்டு நட விரும்புகிறேன். எவ்வளவு இடத்தில் அதை நடலாம்?

ப: ஆடுதுறை 27 குறுவை நெல் ஜூன் மாதம் 10ந் தேதியிலிருந்து 20ந் தேதிக்குள் நாற்றங்காலில் விதை விதைத்து நாற்று 25 நாட்கள் வயதானவுடன் நடுவதற்கு உகந்தது. $2\frac{1}{2}$ கிலோ கிராம் விதையை 2 சென்டு நாற்றங்காலில் விதைத்து அதிலிருந்து கிடைக்கும் நாற்றை 20 சென்டு நிலத்தில் நடலாம், நடவு வரிசைக்கிடையில 8 அங்குலம் இடைவெளியும், வரிசையில் 4 அங்குலம் இடைவெளியும் விட்டு இரண்டு நாற்றுகள் வீதம் நடவேண்டும்.

கே: ஆடுதுறை 27 நெல்லுக்கு உயர்ந்த பட்சம் எவ்வளவு எரு உரம் போடலாம்?

(ஏ) கிளரிசீடியா (அ) பில்லி பசரா தழை

(பி) சூப்பர் பொட்டாஷ் யூரியா

(சி) நுண் உணவுகள் இரும்பு, துத்தம், மக்னிஷியம், மாங்கனீஸ் முதலியன.

ப: ஆடுதுறை 27 நெல்லுக்குப் போடவேண்டிய உர அளவு:—

தழைச்சத்து (N) 60 இராத்தல்–அமோனியம் சல்பேட் 150 கிலோ அல்லது யூரியா 65 கிலோ; மணிச்சத்து (P_2O_5) 45 இராத்தல்–சூப்பர் பாஸ்பேட் 100 கிலோ; சாம்பல் சத்து (K_2O) 30 இராத்தல்–மியூரியேட் ஆப் பொட்டாஷ் 25 கிலோ

பசுந்தழையுரம் .. ஒரு எக்கருக்கு 5,000 கிலோ.

நுண் உணவுகள் விகிதம் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை.

ஏ. எஸ். வெங்கட்டராவ், ஹனுமந்தாபுரம்.

கே: நிலக்கடலை சாகுபடியில் விதையை பாக்டீரியா கலவையில் முதற் பராமரிப்பு செய்து, நுண் உணவு சத்துக்களை உரங்களோடு சேர்த்து உரமிட்டு, பயிர் செய்து பார்க்க (மேழிச்செல்வம் கட்டுரைப்படி) விரும்புகிறேன். உரக்கலவைகள் கிடைக்கும் இடம் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். தவிர நுண் உணவுச் சத்துக்களை (N.P.K.) என்.பி.கே. உரங்களோடு கலந்து நிலத்தில் போட்டு உழுது விடலாமா? அல்லது நீரில் கரைத்தே தெளிக்க வேண்டுமா என்பதையும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். 50 சென்டு நிலத்தில் பரிசோதனை செய்து பார்க்க விரும்புகிறேன். எவ்வளவு உரம் தனித்தனியாக (N.P.K.) என். பி. கே. அல்லது கலவை உரத்தோடு நுண் உணவுச் சத்துக்களை சேர்த்து பரிசோதனை செய்து பார்க்கலாம் என்பதற்கும் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்.

ப: நிலக்கடலை விதையின் முதற் பராமரிப்புக்கு தேவையான உப்புக்களை பின்வரும் விலாசங்களில் ஏதேனும் ஒன்றுக்கு எழுதி நீங்கள் பெறலாம்.

1. எம். ஷா. & கோ (M. Shaw & Co, Madras-1) மதருஸ்-1.

2. பிரீ இந்தியா சையண்டிபிக் கம்பெனி, மதருஸ்-15 (Free India Scientific Company, Madras-15.)

3. சர்வோதய ஸர்ஜிகல்ஸ், மதருஸ்-4, (Sarvodya Surgicals, Madras-4.)

நுண் உணவுச் சத்துக்களை நீரில் கரைத்து (உரத்தோடு கலக்காமல் தனியாக) விதைப்பதற்கு முன் மண்ணில் தெளிக்கவும்.

டி. எஸ். சந்திரசேகரன், மதுராந்தகம்.

கேள்வி: பசுந்தாள் உரச் செடிகளில் உள்ள மணிச் சத்து சாம்பல் சத்து பூமியிலிருந்து கிரகித்தவையா? அல்லது தானே தயாரிக்கின்றதா? நுண் ஊட்டகங்கள் (Trace elements) இச் செடிகளில் உள்ளனவா?

பதில்: பசுந்தாள் உரச் செடிகளில் உள்ள மணிச் சத்து, சாம்பல் சத்து இவைகள் பூமியிலிருந்துதான் கிரகிக்கப்படும். அவைகளைச் செடிகள் தானே தனித்துத் தயாரிக்க இயலாது. பசுந்தாள் உரச் செடிகளில் நுண்ணூட்டகங்கள் (Trace elements) இருக்கின்றன. பசுந்தாள் உரச் செடிகளில் எல்லா நுண்ணூட்டகங்களுமே அடங்கியுள்ளன.

கே: கம்புவையும், பச்சைப் பயறையும் கலந்து பயிரிடும் போது எந்த இரசாயன உரங்களை எவ்வளவு அளவில் உபயோகிக்கலாம்? (கம்பு ரகம் எக்ஸ் 3).

ப: மானுவாரியாக பயிரிடும் கம்புப் பயிருக்கு ஏக்கருக்கு 10 வண்டி கம்போஸ்ட் அல்லது தொழு உரத்துடன் 100 ராத்தல் அம்மோனியம் சல்பேட் போடுவதால் கூடுதலான மகசூல் கிடைத்திருக்கிறது. பச்சைப் பயறை எக்ஸ் 3 கம்புடன் கலந்து பயிரிடுவதற்கு மேற்குறிப்பிட்ட உரங்களே போதுமானவை.

கே: சோளம் உளுந்து கலந்து பயிரிடும்போது எந்த இரசாயன உரங்களை எவ்வளவு அளவில் உபயோகிக்கலாம்? (சோளம் ரகம் சி.எஸ்.எச். 1).

ப: சி.எஸ்.எச். 1 சோளம் சென்னை இராஜ்யத்தின் பல ஜில்லாக்களில் பயிரிட்டுப் பரீட்சித்ததில் பாசனப்பட்டமான தை மாதம் முதல் வைகாசி வரையிலும் பயிரிடக்கூடிய பட்டத்திற்கே ஏற்றதெனத் தெரிகிறது (சில ஜில்லாக்களில் ஜனவரி மாதத்திலும், இன்னும் சில ஜில்லாக்களில் பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும் இன்னும் சில ஜில்லாக்களில் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி வரையிலுங்கூட பாசனச் சோளத்தை விதைக்கிறார்கள்). நீர்ப்பாசனத்தோடு பயிரிடும் சி.எஸ்.எச். 1 சோளப் பயிருக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்டுடன் விதைப்பின்போது 150 இராத்தல் அம்மோனியம் சல்பேட்டும், 200 இராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும் போடுவதுடன் விதைத்து 25 நாட்களுக்குப் பிறகு இன்னும் 150 இராத்தல் அம்மோனியம் சல்பேட் போட்டு தண்ணீர் பாய்ச்சினால்தான் நல்ல மகசூல் கிடைக்கும்.

நீர்ப்பாசனத்தோடு பயிரிடும் சோளப் பயிருடன் உளுந்து கலந்து விதைக்கப்படும் பழக்கம் சாதாரணமாக இல்லை. உளுந்து கலந்து விதைத்தாலும்கூட அதற்காக பிரத்தியேகமாக கூடுதலான எருக்கள் எதுவும் தேவைப்படாது.

கே: கேழ்வரகு தை மாதம் நடுவதற்கு எந்த ரகம் சிறந்தது?

ப: செங்கற்பட்டு மாவட்டத்தில் மார்கழி- தை பட்டத்திற்கு இறைவைப் பயிராக நடுவதற்கு சிறந்தது கோ. 7 ராகி (ராஜம்பேட்டை ராகி). இதன் வயது 100 நாட்கள்.

மேலும், எல்லா மாவட்டங்களுக்கும் மார்கழி–தை பட்டத்திற்கு பாசனப் பயிராக நட சிறந்தது கோ. 8 ராகி (கருஞ்சுருட்டை ராகி). இதன் வயது 90 நாட்கள்.

எஸ். கிருஷ்ணகோனார், தூத்துக்குடி,
திருநெல்வேலி மாவட்டம்

கே: எனக்கு சொந்தமான 3 ஏக்கர் நஞ்சை நிலத்தில் கோழிக்கூடு வாழை பயிர் செய்திருக்கிறேன். பயிர் செய்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. நான் கொஞ்ச நாட்களுக்கு முன் பயிருக்கு ஏற்படும் "பனமா" என்னும் நோய்க்கு "வேப்பம்" என்னும் மருந்தை உபயோகப்படுத்தவேண்டுமென்பதாகப் படித்தேன். அந்தமருந்தை உபயோகப்படுத்தும் விதம், மருந்து கிடைக்கும் இடம் ஆகியவற்றை விபரமாக தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ப: "வேப்பம்" என்னும் மருந்து இதுவரை விவசாய இலாக்காவால் பரிசோதிக்கப்பட்டோ அல்லது அங்கீகரிக்கப்படவோயில்லை. அந்த மருந்து "பர்மா ஷெல் அண்ட் கோ, சென்னை" என்ற முகவரியில் கிடைப்பதாகத் தெரிகிறது.

"பனமா வில்ட்" என்ற வாழை நோய்க்கு கீழ்க்கண்ட தடுப்பு முறைகள் சிபாரிசு செய்யப்படுகின்றன.

1. நோய் தாக்கப்பட்ட வாழையை தோண்டி எடுத்து விட்டு அந்த குழிகளில் சுண்ணாம்பு மற்றும் மணல் கலவையை (1 : 4 என்ற விகிதம்) போடவேண்டும்.

2. வெட் செரசான் என்ற மருந்தை 1 இராத்தலுக்கு 100 காலன் தண்ணீர் வீதம் கலந்து செடியொன்றுக்கு ½ காலன் 0·1 சதம் வெட் செரசான் கலவை வீதம் செடியைச் சுற்றிலும் நிலத்தில் ஊற்றவேண்டும்.

3. இதே போன்ற கலவையை, முதலில் நிலத்தில் ஊற்றிய 1½ மாதங்களுக்குப் பிறகு இரண்டாவது முறையாக வாழைகளை சுற்றிலும் ஊற்ற வேண்டும்.

உங்கள் மாவட்ட விவசாய அதிகாரி அலுவலகத்தில் உள்ள பயிர் பாதுகாப்பு உதவியாளரிடமிருந்து மற்ற விபரங்களை அறிந்துக் கொள்ளவும்.

டாடா பைஸன் மற்றும் ராலி

பாட்டுப் பாடுகிறுர்கள்!

டாடா : ஒன்று இரண்டு பேருக்கே..

பைஸன் : இரண்டு நாலு பேருக்கே...

ராலி : உண்டு டீ அனைவருக்கே!

டாடா : ஒன்று சேருவோம் மூவரும்

பைஸன் : விவசாயி நாம் யாவரும்...

ராலி : நலன் விளையும் மாபெரும்.

டாடா: (மெதுவாக) ஆம், விளையும். ராலீஸ் 'மரம் மார்க்' உரங்கள் மேலும் சிறந்த தேயிலைப் பயிர் விளைய உதவுகிறது. டாடா பைஸன் பூச்சி மருந்துகள் அமோகமான விளைச்சல் தர அதைப் பாதுகாக்கிறது.

TATA FISON RALLIS TREE BRAND FERTILIZERS AND PESTICIDES

டாடா பைஸன் ராலீஸ் பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது

SHBI.RF.88.TAM.

பச்சை வாழை வகையில் ஒரு புதுவகை!

சி. மு. பக்தவத்சலு, ச. சம்பந்தமூர்த்தி, மு. குலசேகரன்.
(மத்திய வாழை ஆராய்ச்சிப் பண்ணை, ஆடுதுறை.)

வரலாறு தொடங்கிய காலந்தொட்டே வாழைகள் நம் நாட்டில் பயிராகி வந்தன என்பதற்கு சான்றுகள் பல உள்ளன. வாழை நமது நாட்டில்தான் முதன் முதலில் தோன்றியிருக்கவேண்டும், என்று வரலாற்று ஆசிரியர் களும் தாவர வல்லுநர்களும் கருதுகின்றனர். பல தரப்பட்ட வாழைவகைகள் நம் நாட்டில் பயிராகி வந்த போதிலும் பச்சை வாழை என்று சொல்லப்படும் குள்ள வாழை வகைகள் நம நாட்டிற்கு தருவிக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது. முதன் முதலில் இந்த குள்ள வாழைகள் சீன தேசத்திலிருந்து மரீஷியஸ் தீவிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிகிறது. மரீஷியஸ் தீவிலிருந்து தென் இந்தியாவிற்கு இந்த வாழை வகைகள் வந்திருக்க வேண்டுமென்று கருதுவதற்கு இட மிருக்கின்றது. குள்ள வாழைகளுக்கு 'மோரீஸ்' வாழை என்ற பெயர் இருப்பதே அதற்குச் சான்ருக அமைகின்றது. திருச்சி மாவட்டத்தில் இப்பச்சை வாழைகள் "கண்டி வாழை" என அழைக்கப் படுவதனுல் இவ்வாழை இலங்கையினின்றும் பரவி இருக்கக்கூடும் என நம்பு வதற்கு இடமுண்டு. இவ்வாழை நம் நாட்டிற்கு வந்தது எப்படி இருப்பினும், மரீஷியஸ் தீவிலிருந்து, உலகின் பல பாகங்களுக்கும் பரவி விட்டது என்பது உண்மை. உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏற்றுமதியாகும் வாழைகளில் 26 சத வீதம் இந்தபச்சை வாழைகள் என்ருல் இந்த வாழை களின் பெருமை நன்கு விளங்கும். உலகிலேயே அதிக மாகப் பயிராகும் வாழையும் இவ்வகை வாழையேயாகும்.

சென்னை மாநிலத்தில் பச்சை வாழை மிக அதிகமாக பாலாற்றங் கரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் பயிராக்கப் படுகின்றது. அடுத்தப்படியாக திருச்சி, தென்னுற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களிலும் ஆங்காங்கு காணப் படுகின்றது.

இந்தியாவில் நமது மாநிலத்தைவிட மராட்டிய மாநிலத்தில் கிழக்குக் கண்டேஷ் மாவட்டத்தில் மிக சுத்தமாக சிறந்த முறையில் பச்சைவாழைகள் பயிராக்கப் படுகின்றன. பச்சை வாழைகள் இங்கு, உலகில் எங்குமே பெறமுடியாத அளவு பலன் தருகின்றன. ஏறத்தாழ ஏக்கருக்கு சராசரி 20 டன் வரை பழங்கள் கிடைக்கின்றன! இங்கிருந்துதான் 4,000 டன் வாழைப் பழங்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதுமட்டு மன்றி, மேற்கு வங்காளம், மத்திய பிரதேசம், குஜராத், ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் பயிராகிவரும் இவ்வகை வாழைகளைப்பற்றி சிறிது காண்போம்.

பச்சைவாழைகள் மிகக்குள்ளமாக இருக்கும்; சுமார் ஐந்து அடிதான் வளரும். அடிமரம் நன்ருகப் பருத்து, திட்டு திட்டாகக் கருநிறம் பாய்ந்திருக்கும்; இலை குட்டையாகவும் அகலமாகவும் இருக்கும். 12 மாதங்களில் பலனுக்கு வரும். இப்பச்சை வாழைகள், நல்ல பெரிய தார்களைக் கொடுக்கக்கூடியவை. சராசரி ஒரு தாரில் எட்டு முதல் பன்னிரண்டு சீப்புக்காய்கள் இருக்கும். தார்கள் ஆரம் பத்தில் அகலமாகவும் அடியில் வரவர குறுகியும், (படம் 1) ஒரு கூம்பு போன்ற உருவில் இருக்கும். பழங்கள் பழுத்த பின்னும் கூட இளம் பச்சையாகவே இருக் கும். அதனுல் இந்த வாழைக்குப் பச்சை வாழை என்று பெயர் வந்தது. இவ்வாழை கள் குள்ளமாகவும் பலமான அடிமரத் தோடும் இருப்பதனுல் சாதாரணப் புயல் காற்றினுல் அதிக மாகப் பாதிக்கப்படுவ தில்லை. மரங்கள் குள்ளமாக இருப்ப தால் மருந்துகள் அடிப்பதற்கும் எளி தாக இருக்கின்றது. இந்த வகை வாழை கள் இலைப்புள்ளி நோயினுல் (Leaf Spot) மிக அதிக மாகப் பாதிக்கப்படு கின்றன.



படம் 1—பச்சை வாழைத் தார்

தென்னுற்காடு மாவட்டத்தில் வல்லம் படுகையில் பச்சை வாழைகள் முன்பு அதிகமாகப் பயிராகி வந்தன. இலைப் புள்ளி நோயினுல் அங்கு சிலர் இந்த வாழை பயிரிடு வதையே விட்டு விட்டதாகத் தெரிகிறது. இலைப் புள்ளி நோய் அப்படி ஒன்றும் தடுக்க முடியாத நோய் அல்ல. அடிக்கடி போர்டோ கலவை போன்ற பூஞ்சாண நாசினி களைத் தெளித்தால் போதும்; இந்த நோய் பரவாமல் தடுத்துக் கொள்ள முடியும். ஆனுல் மிகக் கொடிய நோயான 'வாழை வாடல்' நோயினுல் (Panama Disease or Banana Wilt) இது பாதிக்கப் படுவதில்லை. இது இந்த வாழையின் ஒரு சிறப்பியல்பு.

பச்சை வாழையில் ஒரு புதுவகை வாழை இப்போது கிடைத்திருக்கிறது. வல்லம் படுகையில் பச்சை வாழைகள் அதிகமாகப் பயிராகி வந்தன என்று முன்பே கூறினேம். அங்கு ஒரு விவசாயியினுடைய தோட்டத்தில் பச்சை

வாழைகள் பயிராகி வந்தன. ஒரு வாழையின் கன்று மட்டும் தாயை விட உயரமாக வளர்ந்தது. சுமார் எட்டடிக்கு மேல் வளர்ந்து நல்ல பலனைக் கொடுத்தது. இந்தக் வாழையின் கன்றுகளும், மற்ற பச்சை வாழைகளை விட உயரமாக வளர்ந்து ஒரே சீரான தார்களைத் தந்தன. இந்த குறிப்பிட்ட வாழையின் கன்றுகள் மட்டும் பச்சை வாழைகளை விட உயரத்தில் மட்டுமின்றி மற்ற சில குணங்களிலும் வேறுபட்டு காணப்பட்டதால் இதை தனியான ஒருவகை எனக் கருதி 'எட்டடி வாழை' என்று கூறப்பட்டது. இந்தப் புதுவகை 'எட்டடி வாழை' குள்ள வாழையில் ஏற்பட்ட இயற்கை மாற்றத்தினால் உருவான தாகும்.

இது போன்ற இயற்கை மாற்றங்கள் (Mutations) வாழைகளில் ஏற்படுவது ஒன்றும் அதிசயமில்லை. உதாரணமாக ரஸ்தாளியில் இருந்து தான் ஆயிரங்காய் ரஸ்தாளி



(படம் 2)—எட்டடி வாழைத்தார்

தோன்றியது. மொந்தனிலிருந்து தான் தேர்மொந்தன் உருவாயிற்று! எவ்வளவோ மாற்றங்கள் இயற்கையிலேயே வாழைகளில் ஏற்பட்டுக் கொண்டே இருந்தாலும், மக்களுக்குப் பயனுள்ள மாற்றங்களை உடைய வாழைகளை மட்டும்தான் நாம் தேர்ந்தெடுக்கின்றோம். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த எட்டடி வாழையும் பயனுள்ள மாற்றங்களை உடைய ஒரு வாழை ஆகும். "மான்ஸ் மேரி" (Mons Marie) என்ற பெயருடன் ஆஸ்திரேலியாவில் மிகவும் அதிகமாகப் பயிரிடப்பட்டு வரும் வாழையும் இதுபோல் குள்ள வாழையில் ஏற்பட்ட இயற்கை மாற்றத்தினால் கிடைத்த ஒரு உயரமான வாழையாகும்.

இப்போது நாம் தேர்ந்தெடுத்த எட்டடி வாழையும் ஒரு முக்கிய வாழைக்கு வேண்டிய குணங்களனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றது. இந்த வாழை எட்டடி வாழை என்று சொல்லப்பட்டாலும் நல்ல சூழ்நிலையில் 10 அடி வரை வளரக்கூடும். இந்த வாழையின் உயரத்தினாலேயே இந்த வாழைகளை பச்சை வாழைகளிலிருந்து பிரித்து அறிய முடியும். அடிமரம் பச்சை வாழைக்கு இருப்பது போல் தடித்து இராமல் சிறிது மெலிந்தே காணப்படும். எட்டடி வாழையில் இலைகளும், இலைக் காம்புகளும் நீண்டிருக்கும். இலைகள் பெரிதாக இருப்பதோடு பச்சை வாழையில் இருப்பது போல் நெருக்கமாக இல்லாமல் நன்றாக இடம் விட்டு அமைந்திருக்கும். எட்டடி வாழையின் தார்களும், பச்சை வாழைத்தார்களை விட பெரிதாக இருப்பதோடு காய்களும் பெரியதாக இருக்கிறது.

எட்டடி வாழையில் 11 முதல் 14 சீப்பு வரை காய்கள் இருக்கும். பச்சை வாழைத்தார்களைப் போல் கூம்பு வடிவத்தில் இல்லாமல் எட்டடி வாழைத் தார்கள் உருளை போல ஒரே சீராக இருக்கும் (படம் 2). முதல் சீப்புக் காய்களுக்கும் அடிச் சீப்புக் காய்களுக்கும் அதிக வேறுபாடு இருக்காது. இதனால் எட்டடி வாழைத் தார்களைக் கட்டுவதற்கும், வெளி இடங்களுக்கு அனுப்புவதற்கும் எளிதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறது. எட்டடி வாழையின் பழங்கள் பெரிதாக இருப்பதோடு பழுத்தவுடன் இளம் மஞ்சள் நிறமாக மாறுகிறது. ஆனால் பச்சை வாழைகள் பழுத்தபின்பும் இளம் பச்சையாகவே இருக்கின்றன. மேலும் தூர தேசங்களுக்கு பழங்களை அனுப்பும் போது பச்சை வாழைகளைப்போல் சேதமேற்படுவதில்லை. என்று கருதப்படுகிறது. பச்சை வாழைகளைவிட அதிக நாட்களுக்குக் கெட்டுப் போகாமல் இருக்கும் குணம் இந்த எட்டடி வாழைகளுக்கு உண்டு.

எட்டடி வாழைகள் பயிராவதற்கு நிலங்கள் பச்சை வாழைகளுக்கு வேண்டியதைப்போல் அவ்வளவு செழிப்பாக வேண்டியதில்லை. எட்டடி வாழைகள் சாதாரண நிலங்களிலும் நன்றாக வளரும் தன்மை உடையன; தஞ்சை மாவட்ட படுகை நிலங்களில் கூட நேரடி நீர்ப் பாய்ச்சல் இல்லாமலேயே எட்டடி வாழைகள் நல்ல பலன் கொடுக்கின்றன. ஆனால் பச்சை வாழைகள் இங்கு சரியாக வளர்வதில்லை, இருப்பினும் எட்டடி வாழைகள் உயரமாக இருப்பதோடு அடிமரமும் மெலிந்திருப்பதனால் பெரிய தார்களைத் தாங்கமுடியாமல் மரம் ஒடிந்து விடக்கூடும்; காற்றிலும் சாயக்கூடும். ஆகவே முட்டுக் கொடுத்தல் அவசியமாகின்றது. பச்சை வாழைகளுக்கு முட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமேஇல்லை. ஆனால் பச்சை வாழையைவிட

(23-ம் பக்கம் பார்க்கவும்



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

இன்றைய நெருக்கடி நிலையில் ஒவ்வொருவரின் பணியும் நாட்டிற்கு முக்கியம். சிறப்பாக உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட்டுள்ள உழவர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். "படைப்பலத்தை வலுப்படுத்தும் பண்ணைகள்" என்று இந்திய பிரதமர் கூறியதற்கு ஒப்ப, முன்னணியில் நமது ஜவான்கள் அந்நியர்களும் வியக்கும் வண்ணம் வெற்றி கண்டதைப்போல, விவசாயிகளும் உற்பத்திப் பெருக்கத்தில் வெற்றி காணவேணடும். இவ்வெற்றி விவசாயிகளாகிய உங்கள் கையில்தான் உள்ளது. நீங்கள் சாகுபடி செய்யும் பயிருக்கான சிபார்சுகள் அனைத்தையும் ஒருங்கே கடைப்பிடிக்க வேண்டும்.

மேலும் சாகுபடி செய்யும் பயிர்களில் காய்கறிகளும் முக்கியமானவை. காய்கறிகளை அதிக அளவு உற்பத்தி செய்ய முடியும். இதனை பொள்ளாச்சியிலுள்ள விவசாயி திரு. முத்துசாமி கவுண்டர் அவர்கள் நிரூபித்துள்ளார். அவர் கத்தரி சாகுபடி செய்து ஏக்கருக்கு 60,000 ராத்தல் வரை விளைவித்திருக்கிறார். அவர் இவ்வளவு அதிக விளைச்சல் எப்படி பெறுகிறார் என்பதை விளக்கி 15—10—65ல் திருச்சி வானொலி மூலம் ஒலி பரப்பிய பேட்டியை நீங்கள் கேட்டிருப்பீர்களென நினைக்கிறேன். அத்தகைய பேட்டிகளை வியாழக்கிழமை தோறும் விவசாயிகளுக்கான நிகழ்ச்சியில் கேட்டு, நீங்கள் பயனடைய வேண்டுகிறேன்.

மேலும், விவசாயிகளுக்கான தொழில் நுணுக்க ஆலோசனைகள் சாகுபடி காலத்திற்கு ஏற்ப ஒவ்வொரு திங்கட்கிழமையும் திருச்சி வானொலி மூலம் ஒலிபரப்பப்படுகிறது. தொடர்ந்து கிராம வானொலி மன்றத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், ஒவ்வொரு மாதத்தில் இரண்டாவது செவ்வாய்க்கிழமையும் விவசாயிகளுக்கான பேச்சுகள் ஒலிபரப்பப்படுகின்றன. திருச்சி அகில இந்திய வானொலி நிலயம் விவசாயிகளுக்காக ஒவ்வொரு நாளும் இரவு 7-30 முதல் 8 மணிவரை ஒலிபரப்புகிறது. அவ்வொலிபரப்பில் மேலே கூறியபடி, திங்கள், வியாழன், வெள்ளிக்கிழமைகள் சிறப்பு வாய்ந்தவையாகும். எனவே, நீங்கள் தொடர்ந்து விவசாயிகளுக்கான நிகழ்ச்சிகளைத் தவறாமல் கேட்டுப் பயனடைய வேண்டுகிறேன்.

உங்கள் நலனைக் கருதும்,

டி. கணபதி.

வானொலி விவசாய அலுவலர்.

36/B, மௌண்ட் ரோட், சென்னை-2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை!

கேழ்வரகு சாகுபடியும் அதன் தீவிர சாகுபடிக் குறிப்புகளும்.

கேழ்வரகு புஞ்சையில் ஆனி–ஆடி மாதங்களிலும், இறைவையில் முதற் பருவம் வைகாசி–ஆடி முடியவும் இரண்டாம் பருவம் கார்த்திகை–தை முடியவும் பயிர் செய்யப்படுகிறது. பெரும்பாலும் நம் மாநிலத்தில் மார்கழி தை மாதங்களில் விதைப்பு நடக்கிறது.

கேழ்வரகில் அதிக விளைச்சல் பெற, இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்ற பின்வரும் பொறுக்கு ரகங்களைப் பயிரிடவேண்டும்.

ரகம்.	வயது நாட்கள்.	ஏக்கர் மகசூல் கிலோ.	இடங்கள்.
கோ. 1	120	1000	எல்லா மாவட்டங்கள்
கோ. 2	110	1000	ஷை
கோ. 5	115	1600	சேலம் தென் ஆற்காடு.
கே. 2	135	1400	திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை,
கோ. 7	100	1200	எல்லா மாவட்டங்கள்
கோ. 8	90	1000	தென் ஆற்காடு, செங்கல்பட்டு.

நாற்றங்காலில், ஏக்கருக்கு 20 வண்டி தொழுஉரம் இட்டு உழுது, நிலத்தை பாத்திகளாகப் பிரிக்கவேண்டும். ஏக்கருக்கு $1\frac{1}{2}$ கிலோ விதையை அக்ரசானில் கலந்து 3 செண்டில் விதைத்தால் போதுமானது. நாற்று பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் 3 செண்டிற்கு $2\frac{1}{4}$ கிலோ வீதம் சி.ஏ.என். உரம் தூவ வேண்டும்.

நடவு வயலில் ஏக்கருக்கு 10 வண்டி தொழுஉரம் போடவேண்டும். கடைசி உழவில் 57 கிலோ சூப்பரும், 16 கிலோ மியூரியேட் ஆஃப் பொட்டாஷும் போட்டு உழ வேண்டும். நாற்று நடுவதற்கு முன் அம்மோனியம் சல்பேட் 45 கிலோ அல்லது யூரியா 20 கிலோ போட வேண்டும். நேரடியான உரங்களுக்குப் பதில் கலப்பு உரம் 150 கிலோ கடைசி உழவில் போடலாம். நாற்றை பறித்து நடுவதற்குமுன் போர்டோ கரைசலில் மேல் பகுதியை நனைத்து நடவேண்டும். இரண்டு நாற்றுக்கள் வீதம் குறுகிய காலப் பயிருக்கு 5 அங்குல இடைவெளியிலும், நீண்ட காலப் பயிருக்கு 7 அங்குல இடைவெளியிலும் நடவேண்டும்.

களையெடுத்த பின் இரண்டாவது முறை அமோனியம் சல்பேட் 45 கிலோ அல்லது யூரியா 20 கிலோ தூவ வேண்டும். பயிர் நட்ட 1 மாதம் கழித்து பி.எச்.சி. 10 சதம் ஒரு முறை தூவியும், அவ்வப்போது விழும் பூச்சிகளைத் தடுக்க தக்க நடவடிக்கையும் செய்ய வேண்டும். இவ்வாறு தீவிர சாகுபடி முறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் அதிக விளைச்சல் பெறமுடியும்.

[1—10—65 அன்று திரு. கே மகுடேஸ்வரன், உதவி சிறு தானிய நிபுணர், கோவை அவர்தம் வானொலி உரையின் சுருக்கம்.]

சோளத்தைத் தாக்கும் பூச்சிகளும் அவற்றைத் தடுக்கும் முறைகளும்

சோளத்தைத் தாக்கும் பூச்சிகளும் அவற்றின் சேதத்தைத் தடுக்கும் முறைகளும் பின்வருமாறு :—

சோளம் குருத்து ஈயின் புழு குருத்தைக் கடித்து ஒரு மாதம் வரை சேதமேற்படுத்துகிறது. இதனால் செடி, அழுகி காய்ந்து விடுகிறது. அதிக விதை விதைத்து, பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றி விடுவது சேதத்தைக் கட்டுப்படுத்தும். கருப்பு வண்டுகள், கருப்பு மீகாடிட்ட மஞ்சள் வண்டுகள் இலைகளைத் கடித்து சேதப்படுத்துகின்றன. இறக்கையில்லா வெட்டுக்கிளி இலையின் ஓரங்களைத் தின்பதால் இலைகள் வாடி பயிர் மஞ்சள் நிறமடைகிறது. வண்டுகளையும், வெட்டுக்கிளிகளையும் பி.எச்.சி, 10 சதம் தூவி கட்டுப்படுத்தலாம். தண்டைத் துளைத்து, குருத்து அழுகச் செய்யும் தண்டு துளைக்கும் குருத்துப் புழுவின் சேதத்தைத் தவிர்க்க நீரில் கரையும் பி எச்.சி. $\frac{1}{2}$ கிலோ தூளை 30 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரண்டு முறை தெளிக்க வேண்டும்.

இலைகளுக்கு பெருமளவில் சேதமேற்படுத்தும் சிவப்பு கம்பளிப் பூச்சியை முதலில் பி.எச்.சி. 10 சத தூள் தூவியும், பின்னர் பாரதியான் தெளித்தும் கட்டுப் படுத்தலாம். இலைகளைத் தாக்கி சாற்றை உறிஞ்சும் சிவப்பு சிலந்திப் பேனின் சேதத்தைத் தவிர்க்க ஏக்கருக்கு 7—9 கிலோ கந்தகத்தூள் தூவலாம். அல்லது டிரைதியான் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். கதிர் பால் பிடிக்கும் பருவத்தில் கதிர் நாவாய்ப்பூச்சி மணிகளைத் தாக்கி சாற்றை உறிஞ்சுவதால் கதிர் மணிகள் விருத்தியடைவதில்லை. இதன் சேதத்தைத் தவிர்க்க கதிர்பால் பிடிக்கும் தருணத்தில் பி.எச்.சி. 10 சதத்தூள் தூவப்பட வேண்டும்.

இவ்வாறு குருத்து ஈ, தண்டுப்புழு தாக்கிய பயிர்களை அப்புறப்படுத்தியும், ஒரு மாதப் பயிரில் பி.எச்.சி. 10 சதம் தூள் தூவியும், 3 வாரம் கழித்து தண்ணீரில் கரையும் பி.எச்.சி. $\frac{1}{2}$ கிலோ தூளை 30 லிட்டர் தண்ணீரில் தெளித்தும், கதிர் வெளி வந்தவுடன் பி.எச்.சி. 10 சத தூள் தூவியும் பயிர்ப்பாதுகாப்பு செய்வதால், பூச்சிகளினால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்பட்டு சோளம் மகசூல் பெருகும்.

[8—10—65 அன்று வானொலியில் திருமதிலீலா டேவிட், விரிவுரையாளர் (பூச்சியல்) கோவை அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

பிரத்தியேக பட்டங்களில் கரும்பு சாகுபடி

ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் முதல் வாரங்களில் கரும்பு நடவு செய்து, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அறுவடை செய்வது பிரத்தியேகப்பட்டமாகும். ஆற்றுக்கால் இருபோக நிலங்களில் 3 அடி இடைவெளியில் கிடங்குகள் வெட்டப்படுகின்றன. 15 முதல் 30 அடி இடைவெளியில் நிலத்தின் சாய்வுக்கேற்ப வடிகால் கிடங்குகள் வெட்டப் படுகின்றன. தோட்டக்கால் நிலங்களில் 3 அடிக்கு ஒருகிடங்கு எடுக்கப்படுகிறது.

கரும்பு சாகுபடி செய்வதற்கு 2300 கிலோ தழையுரம் அல்லது 5 டன் கம்போஸ்ட் அல்லது தொழு உரமோ இட வேண்டும். வெல்லம் காய்ச்சும் பிரதேசங்களுக்கு 63—90 கிலோ தழைச்சத்தும், ஆலைப்பிராந்தியங்களுக்கு 90–112 கிலோ தழைச்சத்தும் போதுமானது. நிலத்தில் பயிருணவுச் சத்துக்களின் சமநிலையை பராமரிக்க 45 கிலோ மணிச்சத்தும், 23 கிலோ சாம்பல் சத்தும் இடலாம். தழைச்சத்து உரங்களை 2 பாகம் இரசாயன உரமாகவும், 1 பாகம் பிண்ணாக்கு முதலியவை மூலமாகவும் இரண்டு தவணைகளில் நடவு செய்த 45–வது நாளிலும் 110–வது நாளிலும் இடலாம்.

நடவுக்கு முன், கறையான் தாக்காமல் இருக்க 14 கிலோ பி.எச்.சி. 10 சத தூள் தூவ வேண்டும். ஏக்கருக்கு 15000 முப்பரு உள்ள விதைக்கரணைகளை அரிடான் அல்லது அகலாலில் தோய்த்து நடவேண்டும். களைகள் முளைத்தவுடன் களைக்கொத்தல் கொடுக்க வேண்டும். இப்படிக் கொத்துவதால், பின்தங்கிய முளைகள் முளைப்பதற்கும் ஏதுவாகும். முதல் களை கொத்தி உரம் வைக்கும் போது கட்டைகளில் சணப்பு 18 கிலோ அல்லது தக்கைப் பூண்டு 12 கிலோ விதைத்து ஊடுபயிர் செய்யலாம் இரண்டாவது தடவை உரமிடுவதற்கு முன் (கரும்பு நட்ட $3—3\frac{1}{4}$ மாதத்தில்) வளர்ந்த பசுந்தாள் பயிரை பிடுங்கி சால்களில் மடக்கி வைத்து மூட வேண்டும். இத்தழையுரம் மக்கி பயிருக்கு நல்ல எருவாகும்.

கரும்பு முளைக்கும் போதும், கிளைக்கும் போதும் வாரத்திற்கொருமுறையும், வளரும் பருவத்தில் அடிக்கடியும், முதிரும் காலத்தில் நீண்ட இடைவெளிகளிலும் நீர் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் தேங்குதல் கூடாது. கரும்புப் பயிருக்கு சேதம் ஏற்படுத்தும் குருத்துப் பூச்சியைத் தடுக்க எண்டிரின், பாலிடால் தெளிக்க வேண்டும். நுனிக்கொழுந்து பூச்சி தாக்கிய பயிர்களை அப்புறப் படுத்தி பரவாமல் தடுக்கவேண்டும். கணுப்புழுவின் சேதத்தைத் தவிர்க்க, காய்ந்த சோகைகளை அடிக்கடி உரித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பைரில்லா பூச்சியை, பி.எச்.சி. 10 சதம் தூள் தூவியும், சோகை ஒட்டுப் பூச்சியை பி.எச்.சி. 10 சதம் தூள் தூவியும், பி.எச்.சி. 50 சத மருந்துக் கரைசலை தெளித்தும், கட்டுப்படுத்தலாம். கரும்பு சோகைகளை கயிராகப் பின்னி, கரும்பு சாயாமல் கட்டவேண்டும். இலாகாவால் சிபாரிசு செய்யப்படும் கோ. 419, கோ. 449 கோ. 658 முதலிய ரகங்களை உபயோகப்படுத்தி, நல்ல முறையில் கரும்பு சாகுபடி செய்யலாம்.

(12—10—65 அன்று திரு. பி. பரமானந்தன் கரும்பு பெருக்க அலுவலர், திருச்சி, அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.)

சென்னை மாகாணத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தின் முன்னேற்றமும், தீவிர விவசாயப் பகுதித் திட்டத்தின் அமுலும்.

"பாக்கேஜ்" திட்டம் என்று கூறப்படும் தீவிர விவசாய மாவட்டத் திட்டம் தஞ்சாவூர் ஜில்லாவில் 1960-ம் வருடம் ஏப்ரல் 13-ந் தேதி துவக்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுக ளாக இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, விவசாயத்தில் முன்னேற்றம் ஏற்படச் செய்துள்ளது. திட்டத்திற்கு முன் எக்கருக்கு 911 கிலோவாக இருந்த நெல் விளைச்சல் இப்போது 1092 கிலோவாக உயர்ந் துள்ளது. இது 20 சத கூடுதல் விளைச்சலாகும். இத் திட்டத்தில் ஒவ்வொரு பண்ணைக்கும் 'பண்ணைத் திட்டங் கள்' தயாரிக்கப்படுவதால் விவசாயிக்கும், கிராம சேவக் குக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. விவசாயி களுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களான விதை, ரசாயன உரம், பூச்சி பூசண மருந்துகள், தக்க காலத்தில் கிடைக்கவும், சாகுபடி செலவுகளுக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பண்ணை திட்டங்களின் அடிப் படையில் கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்துக்கேற்ற 'தீவிர சாகுபடி முறை கள்' தயாரிக்கப்பட்டு, எல்லா விவசாயிகளும் அதைக் கடைப்பிடிக்கச் செய்கின்றனர். இத்தீவிர சாகுபடி முறை களினால் ஏற்படும் பலன்களை விவசாயிகளுக்கு நேரில் விளக்க விவசாயிகளின் வயல்களிலேயே 'முழு நிரூபணங் கள்' போடப்படுகின்றன. இத்திட்டத்தின் பலனாக உரம் உப யோகிக்கும் அளவு அதிகமாகியுள்ளது. 1959-60-ல் சரா சரி எக்கருக்கு உபயோகப்படுத்தப்பட்ட 9 கிலோ அமோ னியம் சல்பேட்டும், 6·3 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும், 1964–65-ல் முறையே 22·7 கிலோவாகவும், 24·5 கிலோவாகவும் உயர்ந்துள்ளது. மற்றும் பயிர்பாதுகாப்பு மருந்துகளின் உபயோகம் 300 டன்னி லிருந்து 2400 டன்களாக உயர்ந்துள்ளது. மண் மாதிரி களைப் பரிசோதிக்க ஆடுதுறையில் மண் பரிசோதனைச் சாலை ஒன்றும், இம்மாவட்டத்திற்கேற்ற சாகுபடிக் கருவி கள் தயாரிக்கவும், பழுது பார்க்கவும் திருவாரூரில் கருவிக் கூடம் ஒன்றும் இத்திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரு கின்றன. மேலும் உரங்கள், தானியங்கள் முதலியவற்றை சேமித்து வைக்க இதுவரை 288 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.

தீவிர விவசாய மாவட்ட திட்டத்தினால் ஏற்பட்ட முன் னேற்றத்தின் அடிப்படையில், மதுரை, செங்கல்பட்டு, கோயமுத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் 1965-ம் வருடம் ஏப்ரல் 17-ந் தேதி முதல் "தீவிர விவசாய பகுதித்திட்டம்" அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இம்மாவட்டங்களின் 133 வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வட்டாரங்களிலுள்ள பாசனப் பயிர்களான நெல், சோளம், ராகி, பருத்தி, நிலக்கடலை முதலியன இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. தஞ்சாவூர் திட்டத்தைப் போலவே இத்திட்டத்திலும் ஒவ்வொரு பயிருக்கும், மாவட்டத்திற்கேற்ப 'தீவிர சாகு படி முறைகள்' நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இம்முறைகளையே முழு நிரூபணங்களில் செய்துகாட்ட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதல்படியாக அலுவலர் களுக்குப் பயிற்சி அளிக்கவும், உற்பத்தித் தேவைகள் போதுமான அளவில் உரிய நேரத்தில் கிடைக்கவும், மண் மாதிரிகளை பரிசோதனை செய்யவும், பஞ்சாயத்துக்கள், கூட்டுறவு சங்கங்கள் முதலியவற்றை வலுப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தி வெற்றிபெற, விவசாயி கள் ஒத்துழைக்க வேண்டும்.

[15—10—65 அன்று திரு. டி. எஸ். பிரான்சிஸ், கூட்டு விவசாய நெறியாளர் (தீவிர விவசாய பகுதித் திட்டம்) அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.]

சம்பா தாளடிப் பயிர் பாதுகாப்பு முறைகள்

சம்பா, தாளடிப் பயிர்களில் பூச்சி, பூசணங்களால் சேதம் ஏற்படாமல் பயிர் பாதுகாப்பு செய்தல் மிகவும் அவசியம்.

தடுப்பு முறை:—பூசண நோய்கள் விதை மூலம் பரவுவதைத் தடுக்க விதைகளை, 2 கிராம் பூசண நாசினி மருந்துடன் கலந்து விதைக்கவேண்டும். குருத்துப்பூச்சி, புள்ளிநோய், குலைநோய் முதலியவற்றைக் கட்டுப்படுத்த 100 மில்லி லிட்டர் என்ட்ரினை 100 லிட்டர் தண்ணீரில் ½ கிலோ தாமிர பூசணங்கொல்லியுடனும் அல்லது 100 மில்லி லிட்டர் பாரதியானை 200 லிட்டர் தண்ணீரில் ½ கிலோ பூசணங் கொல்லியுடனும் கலந்து நாற்றுப் பறிப் பதற்கு ஒரு வாரம் முன்பும், நட்டபின் 2-3 வாரங்களி லும், தொண்டைக் கதிர் தோன்றும் சமயத்திலும் தெளிக்கவேண்டும். எலிகளைத் தடுக்க நெல் அறுவடைக்குப் பின், வரப்புகளை வெட்டிப் பிடித்தும், ஜூன்–ஜூலை மாதங் களில் நீர் பாய்ச்சும்போது பிரகாசமான விளக்குகளை வைத்துப் பிடித்தும், பாஷாணம் கலந்த ஆகாரங்கள் வைத்தும் கொல்லலாம்.

கட்டுப்படுத்தும் முறை:—நாற்றங்காலில் தோன்றும் திரிப்ஸ் என்னும் பேனை கட்டுப்படுத்த பி.எச்.சி. 10 சதம் தூவ வேண்டும். பச்சைத் தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த டி.டி.டீ. 50 சதம் தெளிக்கலாம். வெள்ளைத் தத்துப் பூச்சியை பி.எச்.சி. 10 சதம் தூவி கட்டுப்படுத்தலாம். மேற்சொன்ன பூச்சிகளை பாரதியான் அல்லது என்ட்ரின் மருந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம். இது ஆனைக் கொம்பன் ஏற்படாமலும் கட்டுப்படுத்தும். சூரை மாவுப் பூச்சியால் ஏற்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பயிர்களை அப்புறப்படுத்தி விட்டு, பாரதியான் மருந்தை இரட்டிப்பு அளவில் தெளிக்க வேண்டும். வெட்டுக்கிளி, கொக்குநோய், நாவாய்ப்பூச்சி, புகையான் பூச்சி போன்றவைகளை பி.எச்.சி. 10 சதம் தூவி கட்டுப் படுத்தலாம். எலிப்பாஷாணம் கலந்த ஆகாரங்களை வைத்தும், கிட்டிகள் வைத்துப் பிடித்தும் எலிகளைக் கொல்ல வேண்டும்.

பயிர்பாதுகாப்புக்கு வேண்டிய ஆலோசனைகளையும், கருவி களையும் இலாக்கா அலுவலர்களிடமிருந்து பெற்று பயன் படுத்தி, பலன் அடையலாம்.

[22—10—65 அன்று திரு. கே. ஆர். நாகராஜன், பயிர் பாதுகாப்பு நிபுணர், தஞ்சாவூர், அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்].

நீங்கள் கேட்கப்போகும் கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகள்.

(செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7-30லிருந்து 8 மணி வரை திருச்சி, சென்னை-அ, திருநெல்வேலி வானொலி நிலையங்களில் கேட்கலாம்.)

3—12—65

ஜீவனப் பயிர்கள்	திருமதி கிரிஜா பாலசுப்பிரமணியம், தாவர இயல் விரிவுரையாளர், விவசாயக் கல்லூரி, கோவை.

10—12—65

திராட்சை சாகுபடி	திரு ஜே. பி. என். அப்துல் காதர், உதவி தோட்டக்கலை நிபுணர், கோவை.

14—12—65

இறைவை நிலக் கடலையின் தீவிர சாகுபடி.	திரு டி. பி. ஷண்முக நாயனர், துணை விவசாய நெறியாளர், தஞ்சாவூர்.

17—12—65

சில சத்துள்ள உணவுப் பயிர்கள்.	திரு பசுலுல்லா கான், கூட்டு விவசாய நெறியாளர், சென்னை-5.

24—12—65

நஞ்சையில் நெல்லுக்குப் பின் பருத்தியின் தீவிர சாகுபடி.	திரு ஆர். பாலசுப்ரமணியன், மாவட்ட விவசாய அலுவலர், கும்பகோணம்.

31—12—65

மஞ்சள் சாகுபடி	திரு கே. ஸ்ரீராமன், மாநில விற்பனை அலுவலர், சென்னை-2.

குடியானவர்களின் குறிக்கோள்

'அதிக உற்பத்தி செய்து அதிகம் விற்க வேண்டும்' என்பதே எல்லா குடியானவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும். விவசாயிகளுக்கு உற்சாகமளிக்க ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்தாபனங்கள் இருக்க வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்களும், உற்பத்தியாளர் கூட்டுறவுகளும் இத்துறையில் முன்னணியில் நிற்கும் என்று நம்புகிறேன். நமது சுதந்திரப் போராட்டத்தின் போது விவசாயிகள் உன்னதமாகப் பணிபுரிந்தனர். தற்போதைய நெருக்கடியான கட்டத்திலும் தேசத்துக்குப் பக்க பலமாய் இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

[10—10—65 வானொலி உரையில் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி]

குடியானவர்களுக்கு கோரிக்கை

இப்போது ஒரு மணி தானியம் உற்பத்தியாகும் இடங்களில் எல்லாம் இனி இரண்டு மணி தானியம் உற்பத்தி செய்யவேண்டும். தரிசாகக் கிடக்கும் சிறுசிறு திட்டு நிலங்களைக்கூட சாகுபடிக்குக் கொண்டு வரவேண்டும். வெளி நாடுகளிலிருந்து போதிய அளவு ரசாயன உரம் இறக்குமதி செய்வதும் முடியாது. ஆகவே தழை எரு தயாரிப்புக்கு பெரு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

[10—10—65 வானொலி உரையில் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி]

[19-ம் பக்கம்—தொடர்ச்சி]

எட்டடி வாழை அதிகக் குளிரைத் தாங்கும் சக்தி உடையது என்பது முக்கியமாகும். ஆகவே இந்த எட்டடி வாழையை பழனி மலைத் தொடரிலும், சேர்வராயன் மலையிலும் பயிரிடலாம். பச்சை வாழைகள் அதிகக் குளிரினல் தொண்டை அடைத்து தார் வெளிவராமல் நின்றுவிடும். அல்லது மரத்தைப் பிளந்துகொண்டு தார் வெளிப்படலாம். இம்மாதிரியான தொல்லைகள் எட்டடி வாழைக்குக் கிடையாது.

எட்டடி வாழை மரம் தாருடன்

இவ்வாறான பலவகைச் சிறப்புக்களை உடையது இந்தப் புதுவகை எட்டடி வாழை. இந்திய நாட்டு வாழைகளுக்குப் பிற நாட்டிலிருந்து அமோகத் தேவை ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் நீங்கள் எட்டடி வாழை போன்ற நல்லவகை வாழைகள் அதிகமாகப் பயிரிட்டு உதவுங்கள். நாட்டிற்கு, சத்துள்ள நல்ல உணவை அளியுங்கள்; எஞ்சியவற்றை ஏற்றுமதி செய்யுங்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு உடனடித் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட உதவுங்கள்.

குழாய்க் கிணறுகள்

(எஸ். ராஜரத்தினம் இ. என். வரதராசன் ம. பகவன்தாஸ் கோவை வேளாண் கல்லூரி.)

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசன வசதிக்காக கிணறுகள் வெட்ட சர்க்கார் முடிவு செய்துள்ளனர். கிணறுகள் வெட்ட சர்க்காரி லிருந்து பண உதவியும் கிடைக்கலாம் என்று சமீபத்தில் செய்தி வெளிவந்ததைப் பார்க்கலாம்.

நீர்ப்பாசனத்திற்கு சாதாரண கிணறு வெட்ட (20'×20' பரப்பும் 50' ஆழமும்) சுமார் ரூ. 30,000 முதல் ரூ. 35,000 வரை செலவு ஆகும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. கோவை ஜில்லா போன்ற இடங்களில் இன்னும் செலவு சற்று அதிகம் ஆகும். இத்தனை செலவு செய்து கிணற்றை வெட்டினபிறகு, தண்ணீரைப் பாய்சுவதற்காக மேலே எடுக்க மின்பொறி அல்லது எண்ணெய்ப்பொறி அமைக்க கூட ரூ. 5000/-க்கு மேலே செலவாகும். இச்செலவுகளை ஒப்புநோக்கின் குறைந்த செலவில் ஒரு கிணறு அமைக்க நல்ல வழி உண்டா என்று எண்ணத் தோன்றுகிறது.

குழாய் கிணற்றிலிருந்து நீர், பாசனத்திற்காக இறைக்கப்படுகிறது

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 5,550 குழாய்க் கிணறுகள் வெட்டி 1.11 லட்சம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதியுண்டாகச் செய்ய தமிழ் நாட்டு சர்க்கார் தீர்மானித்துள்ளது. ஆக சிக்கன செலவில் கிணறு அமையவேண்டுமானால் குழாய்க் கிணறுகள் அமைப்பது தகுந்ததாய்க் காணப்படுகிறது.

பல இடங்களில் தற்போது குழாய்க் கிணறுகள் (Tube Wells & Borewells) வெட்ட தமிழ்நாட்டு விவசாய இலாகாவும் உதவுகின்றது. கோவை வேளாண் கல்லூரி யில் இதுவரை சுமார் பன்னிரண்டிற்கு அதிகமான குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. இவற்றிற்கு ஆன சராசரி செலவு, குழாய்க் கிணறு ஒன்றுக்கு தற்சமயம் சுமார் ரூ. 5000/ தான் ஆகிறது. ஒரு குழாய்க் கிணறு சுமார் 200 அடி முதல் 300 அடி ஆழம் வரைக்கும் தோண்டப்படுகிறது. இதன் அகலம் 10" முதல் 12" வரை இருக்கும். 300' வரை போவதால் ஒன்றுக்கு மேற்பட்ட ஊற்றுகள் உண்டாகி எப்போதும் தண்ணீர் பெறமுடிகிறது.

கோவையில் நீரின்மேல்மட்டம் பூமி மட்டத்திலிருந்து சுமார் 55 அடி முதல் 60 அடிவரைக்கும் நிற்கும். நீர் இறைபட இறைபட ஊற்றுக்கள் சுரந்து நீரை வேண்டிய அளவிற்குத் தரும். உள் அழுந்து குழாய் களை (Submercible Pumps) கிணற்றுக்குள் இறக்கி நீர் வெளியேகொண்டு வரப்படுகிறது. அதாவது குழாய்க் கிணற்றின் ஆழம் 300 அடியானால் உள் அழுந்து குழாய் பூமி மட்டத்திலிருந்து 150 அடியில் கிணற்றுக் குள்ளேயே பொருத்தப்படும்.

மின்விசையின் மூலம் இயங்கும் இக்குழாய் சாதாரண மாக மணிக்கு 4,000 முதல் 5,000 காலன் தண்ணீரை வெளியே இறைக்கும். இதற்கு ஆகும் செலவு 1,000 காலனை இறைக்க 5 பைசாக்கள்தாம்.

இந்த உள் அழுந்து குழாய் ஒன்றுக்கு சுமார் ரூ. 4,000 முதல் ரூ. 5,000 வரை விலை சொல்லப்படுகிறது. இதை மின்சாரத்தோடு இணைத்து வேலை செய்ய, சுமார் ரூ. 2,500 வரை கூடுதல் செலவு ஆகும்.

ஆக குழாய்க் கிணறு வெட்ட செலவு, நீரை வெளியே எடுக்கும் செலவு ஆகியவைசேர்த்து சுமார் ரூ. 12,500-க்கும் குறைவாகவே ஆகின்றது. அதாவது சாதாரண கிணறு வெட்டி நீரை இறைக்கும் செலவில் பாதிக்கும் குறை வாகவே குழாய்க் கிணற்றின் அமைப்புக்கு ஆகிறது.

குழாய்க் கிணறுகள் அநேகம் நம் தமிழ்நாட்டில் பல இடங்களில் தோண்டப்படுகின்றன. குழாய்க் கிணறு வெட்டும் முறையை விவசாய பெருமக்கள் பின்பற்றி நன்மை அடையலாம்.

தென்னந்தோப்பு பராமரிப்பு

டிசம்பர்—ஜனவரி மாதக் குறிப்பு:

தோப்பை புல் பூண்டு இல்லாதவாறு உழுது, மண் திருப்பத்தை உண்டுபண்ண வேண்டும். தண்ணீர் பூமிக்கு மேல் மட்டத்தில் தோன்றும் தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் இக்காலத்தில் தென்னங்கன்றுகளை நடுதல் நல்லது. குருத்தழுகல் நோய் தென்பட்டால் அதற்கு வேண்டியவற்றை செய்தல் வேண்டும். தென்னை மரங்களின் பன்னாடைகளை சுத்தம் செய்ய வேண்டும். இழுத்தால் சுலபமாக வரக்கூடிய காய்ந்த மட்டை, காய்ந்த சருகு, காய்ந்த பாளை முதலியவைகளை நீக்கி மரவிரிப்பை சுத்தமாக வைத்தல் வேண்டும்.

தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளரால் C.1. 40404-64 தேதி 21-4-64 உத்தரவின்படி

1964-65 " ரேட் கான்ட்ராக்ட் " திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட

ஸ்பிரேயர்கள்



' கேடார் '
அசைப்பு ஸ்ப்ரேயர்



' மாருதி '
ஃபுட் ஸ்ப்ரேயர்



' மாருத் '
கையமுத்த ஸ்ப்ரேயர்]



' கேடார்-கோஃபி '
அசைப்பு ஸ்ப்ரேயர்

தயாரிப்பாளர்கள் :

AMERICAN SPRING & PRESSING WORKS (PVT.) LTD.

மார்வே ரோடு, மலாடு, பம்பாய்–64.

தமிழ்நாடு, மைசூர் விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கஸ்வாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,

75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன், தபால் பெட்டி நெ. 539, பெங்களூர்-2.

புகையிலைத் தீவிர சாகுபடித் திட்டம்

திரு. கே. சப்தரிஷி, மாநில புகையிலை பெருக்க அலுவலர். திரு. சி. என். சுப்பிரமணியன், புகையிலை பெருக்க உதவியாளர். திரு. கே. ஏ. நீலாக் கவுண்டர், புகையிலைத் தீவிர சாகுபடித்திட்ட உதவியாளர்.)

(இதற்கொரு திட்டமாவென்று சிலர் வியந்த வண்ணம் கேட்கின்றனர்! திட்டம் கொண்டு வந்தார்களே விஸ்தீரணம் அதிகரிக்குமா? அல்லது விவசாயிகள் முன் வருவார்களா? வரி வட்டாரத்தினுல் மன மொடிந்த விவசாயிகளின் ஆதரவு கிடைக்குமா என்பனபோன்ற சந்தேகங்களை சில கற்றறிந்தவர்கள்கூட வினவுகின்றனர். அவர்களின் அச்சத்தையும், ஐயப்பாட்டையும் போக்கி, இக்கட்டுரை ஓரளவு தெளிவு படுத்துமென நம்புகிறோம்.)

தமிழ்நாட்டில் சென்ற சில ஆண்டுகளாக நெல், எண்ணெய் வித்துக்கள் (நிலக்கடலை), பருத்தி போன்ற பயிர்களுக்கு தீவிர சாகுபடி திட்டம் முதலில் அமுல் செய்யப்பட்டது. வாணிபஞ் சார்ந்த பயிர்வகை களில், உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் புகையிலை மிகவும் உன்னத ஸ்தானம் வகிக்கிறது. அகில உலகி லேயே புகையிலை உற்பத்தி செய்யும் நாடுகளில், இந்தியா விளைச்சலில் மூன்ருவதாவும், ஏற்றுமதியில் ஐந்தாவதாகவும் திகழ்கிறது. வேளாண்மையின் மூலமாக இந்திய விவசாயிகளுக்கு வருடமொன்றுக்கு சுமார் 40 கோடி ரூபாய் கிடைக்கிறது. வாணிபத்தின் மூலமாக, அந்நிய நாட்டுச் செலாவணியாக சுமார் 15 கோடி ரூபாய் நாட்டிற்குக் கிடைக்கிறது. எக்ஸைஸ் வரி மூலமாக, சுமார் 75 கோடி ரூபாய் வருடமொன்றிற்கு கிடைக் கிறது. சுமார் பத்து லட்சம் புகையிலை உற்பத்தி யாளர்களும், ஏழு லட்சம் பதம் செய்யும் தொழிலாளர் களும் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கின்றனர்.

தமிழ்நாடு விளைச்சலிலும், பரப்பளவிலும், மேன்மை யாக இருக்கிறது. இம்மாநிலம், மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது பரப்பளவில் ஐந்தாவதாகவும், உற்பத்தியில் மூன்ருவதாகவும் உள்ளது.

விவசாயிக்கு, எக்கராவொன்றுக்கு ரூ. 500 முதல் ரூ.1,000 வரை ரொக்கமாக லாபம் தரும் பயிராகும். இதை உற்பத்தி செய்வதில் எவ்வளவு கவனம் தேவையோ அவ்வளவு கவனம் அறுவடையானபின் பதம் செய்வதில் செலுத்தப்படுவதாலும், ஏனைய பயிர்களைக் காட்டிலும் அதிக வருவாயைத் தருவதாலும், உற்பத்தியைப் பெருக்கு வதினும் உற்பத்தியின் வருவாயையும், நாட்டின் வருவா யையும் அதிகப்படுத்தவும் தீவிர சாகுபடித் திட்டத்தை அமுல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இத் திட்டத்தின் நோக்கம்:—தமிழ்நாட்டில் புகையிலை சுமார் 42,500 எக்கராவில் பயிர் செய்யப்படுகிறது. உற்பத்தியில் மூன்றில் இரண்டு பாகம் கோவை மாவட்டத் தில் விளைகிறது. ஆதலால் கோவை மாவட்டத்தில் உற்பத்தியின் தன்மையைப் பெருக்கவும், விளைச்சலைப் பெருகச் செய்வதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

கீழ்காணும் பட்டியலில் கோவை மாவட்டத்திலுள்ள ஒன்பது வட்டங்களில் புகையிலை சாகுபடி விஸ்தீரணம் தொகுக்கப்பட்டுள்ளது :—

வட்டம்.	சாகுபடி செய்யும் பரப்பளவு. (எக்கராவில்)
1. அவிஞசி	4,707
2. பவானி	1,830
3. கோவை	300
4. தாராபுரம்	5,643
5. ஈரோடு	290
6. கோபி	5,022
7. பொள்ளாச்சி	1,410
8. பல்லடம்	9,783
9. உடுமலை	1,795
மொத்தம் ..	30,780

மேலே குறிப்பிட்டிருக்கும் பட்டியலிலிருந்து, கீழ்க் காணும் வட்டாரங்கள் புகையிலை உற்பத்தியின் முக்கியத்து வம் பெற்றிருப்பதை உணரலாம்.

வட்டம்.	விஸ்தீரணம். (எக்கரில்)	விளைச்சல். (டன்னில்)
1. பல்லடம்	9,783	6,551
2. தாராபுரம்	5,643	3,779
3. கோபி	5,022	3,336
4. அவிஞசி	4,707	3,152

1964-65-ம் ஆண்டில் முதன் முறையாக அவிஞசி, கோபி வட்டங்களில் முறையே காரமடை, பவானிசாகர் வட்டாரங்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. வருடமொன்றிற்கு 1,000 எக்கரா வீதம் இரண்டு வட்டா ரத்திலுமாக சுமார் 2,000 எக்கரா கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டது. தற்பொழுது எக்கராவொன்றிற்கு சுமார் 1,500 பவுண்டு கிடைக்கிறது. விவசாய இலாக்காவின் தீவிர உற்பத்தியின் மூலமும், விளம்பர ஆலோசனைகளின் பேரிலும் அதிக மகசூல் அடைய வழி உண்டு. கடந்த 3, 4 ஆண்டுகளாக செய்த உரப் பரிசோதனைகளின் மூலம் அதிக மகசூல் அடைய வழி உண்டு என்பதையும்,

புகையிலையின் தரத்தையும் மேம்படுத்த வழி இருக்கிறது என்பதைக் அறியமுடிந்தது. கலப்பு உரமிடுதல் மூலம் ஏக்கராவொன்றிற்கு அரை பாரத்திற்கு அதிகமாக (சுமார் 250 பவு.) மகசூல் கிடைக்கும் என்பதைத் தமிழ் நாடு முழுவதும் செய்து காட்டிய பரிசோதனைகள் 100 இடங்களில் நமக்கு ஐயமறத் தெளிவுபடுத்தியுள்ளன. பவானிசாகர் பண்ணையில் செய்த உரப்பரிசோதனையில் 20, 40, 60, 80 ராத்தல் நைட்ரஜன் இடப்பட்டு பரிசோதனை செய்ததில், புகையிலைக்கு 80 பவு. (N) இட்ட பகுதிகள் அதிக மகசூல் அளிக்குமென தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால் சென்ற 3 ஆண்டுகளில் மட்டும் தனித்தனி பகுதிகளில் பரிசோதனை செய்ததில் ஏக்கராவொன்றிற்கு 500 ராத்தல் கலப்பு உரம் வீதம் (60 ராத்தல் நைட்ரஜன் 30 ராத்தல் பாஸ்பாரிக் அமிலம், 30 ராத்தல் சாம்பல் சத்து) இடப்பட்ட பகுதிகள், 100 ராத்தல் நைட்ரஜன் ஏக்கராவொன்றிற்கு இடப்பட்ட அமோனியம் சல்பேட் பகுதிகளைக் காட்டிலும் அதிக மகசூல் அளிக்கவல்லது என்பதை தெளிவுப்படுத்தியது. ஆகையால் புகையிலைக்கு குறைந்தபட்சம் 500 ராத்தல் கலப்பு உரம் போதுமானது; லாபகரமானது; எடை அதிகம் அளிக்கவல்லது என்பதைப் பல விவசாயிகள் இப்போதுதான் உணர்ந்துள்ளனர். இத்தீவிர சாகுபடித் திட்டப்பகுதியிலும், புகையிலைக்கு இந்த அளவில் சத்து கிடைக்க கலப்பு உரமிட்டால் அதிகப் பலன் உண்டு எனக் கருத்தில் கொண்டு, திட்டத்தில் கொண்டுவந்துள்ள பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

பூச்சி, பூசணங்கொல்லிகள்.—ஒரு பயிருக்கு எரு, அதுவும் எத்தகைய எரு முக்கியம் என்பதும், எவ்வெப் பொழுது இடப்பட்டால் மகசூல் அதிகம் கிடைக்கவல்லது என்று அறிந்துசெய்வது எவ்வளவு முக்கியமோ, அதுபோல் செடிக்கு பூச்சி-பொட்டுக்களினின்றும் காப்பாற்றியும், நோய் நொடியில்லாமல் பாதுகாப்பதும் மிகவும் முக்கியம் என்பதை சொல்லத் தேவையில்லை. புகையிலைக்கு நோய் நாற்றங்காலிலிருந்து ஆரம்பமாகிறது. "அழுகல் நோய்" மிகவும் தீவிரமாகப் பரவக்கூடியது. அதைத் தக்க தருணத்தில் தடுத்தும், எடுத்து நட்ட பயிர்களில் பூசண நோய், புள்ளி நோய் விழாமலும் காக்கவேண்டி யுள்ளது. நோய் மட்டுமல்ல, அசுவினி, பேன், வெட்டுக் கிளி, வெட்டுப்புழு (Prodenia litura) போன்றவை அழிக் காமலும் பாதுகாக்க வேண்டியுள்ளது. ஆதலால் இவை களுக்கு தகுந்த மருந்துகளைப் பாதி விலையில் கொடுத் தும், தடுக்கவும், ஒழிக்கவும் ஆலோசனை அளித்தலும் இத்திட்டத்தில் ஒரு முக்கிய அங்கமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

ரொக்கப்பணம் கடனில் வழங்குதல்.— புகையிலையை பயிர் செய்வதில் மற்ற பயிர்களுக்கு ஆகும் செலவைக் காட்டிலும் முட்டுவழி (initial expenses) அதிகம். ஆதலால் விவசாயிகள் தாங்கள் பயிர் செய்ய ஆரம்பித்தவுடனேயே கைமாற்றாக புகையிலை வியாபாரியிடமே பணம் வாங்கு கின்றனர். புகையிலை வியாபாரியும் விவசாயி தன்னைத் தவிர வேறு யாருக்கும் புகையிலையை விற்கமாட்டார் என்ற நம்பிக்கையில் முன் பணம் கொடுக்கும் வழக்கம் உள்ளது. இதனால் புகையிலை நன்றாக விளைந்தாலும், அதிகவிலை கிடைக்கக்கூடியதாக இருந்தாலும், தான் பணம் வாங்கிய வியாபாரி கேட்கும் விலைக்கே விற்பனை செய்துவிடுகின்றனர். அதனால் போதிய லாபம் அடைய வழி உண்டாவதில்லை. ஆதலால் விவசாயிகளுக்கு தக்க சமயத்தில் கடன் வழங்க "கூட்டுறவு சங்க வங்கியின்" மூலம் குறைந்த வட்டிக்கு தவணையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகக் கீழ்க்காணும் தொகை, செயற்கை உரத்திற்கும், மருந்துகளுக்கும், உற்பத்திக்கெனவும் கொடுக்கப்படுகின்றது :—

(1)	கலப்பு உரம் ஏக்கரா வொன்றிற்கு 500 ராத்தல் வீதம் (Standard Mixture 2)	ரூ. 135·00	ஒரு விவசாயி உற்பத்தி செய்யும் விஸ்தீரணத்தைப் பொறுத்து தன் சொந்தப் பொறுப்பில் (on personal-surety) அதி கபட்சம் ரூ2000வரை வாங்கவும் தனிநபர் ஜாமீன் பேரில் ரூ. 3,000 வரை வாங்கவும் வழியுண்டு
(2)	பூச்சி பூசணங் கொல்லிகள்: (மயில்துத்தக் கலவை மருந்து: பாலிடால், எண்டிரின், ஏக்கராவொன்றிற்கு)	ரூ. 15.00 (50% குறைந்த விலைக்கு)	
(3)	கையில் பணம் செலவிற்கு.	ரூ. 350.00	
	மொத்தம்	ரூ. 500.00	

கோவை மாவட்டத்தில் புகையிலை நடப்படுவது அக்டோபரிலிருந்து (ஐப்பசி-கார்த்திகை) டிசம்பர் வரை ஆகும். விவசாயிகளுக்கு மேற்குறித்த காலத்திற்குள் மூன்றும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்தத் தொகை அடுத்த ஆண்டு "மே" மாதக் கடைசிக்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். இவ்விதம் செய்வதால் புகையிலை மகசூல் உரப் பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டபடி ஏக்கராவொன்றிற்கு குறைந்த பட்சம் 250 ராத்தல் அதிக மகசூல் என்றால் வருடமொன்றிற்கு 2,000 ஏக்கராவில் அதிகபட்ச மகசூல் 500,000 ராத்தல் கிடைக்குமென எதிர்பார்க்கலாம். இத்திட்டம் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் முடியும்பொழுது 6,000 ஏக்கராவில் அமுலில் இருக்கவும் வழி செய்யப்படுகிறது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் முடியும் தறுவாயில் ஐந்தில் ஒரு பாகம் கொண்டு வந்துவிடவும், 1,500,000 ராத்தல் அதிக மகசூல் கிடைக் கவும், வழிகோலும். இதனால் விவசாயிகளுக்கு அதிக மகசூலும், அதிக லாபமும் கிடைப்பதோடு, உற்பத்தியும் அதிகரிப்பதோடு, அரசாங்கத்திற்கு வரியின் மூலம் வருவாயையும் பெருக்கும் என்று திட்டமிடப்பட்டுள்ளது (சுமார் 24 லட்சம் ரூபாய் வரி மூலம் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.)

முதல் ஆண்டில் இத்திட்டத்தில் நிகழ்த்திய சாதனை:— 1964–65–ம் ஆண்டு இத்திட்டம் அவிநாசித் தாலூகாவில் காரமடை வட்டாரத்திலும், கோபி தாலூகாவில் பவானி சாகர் வட்டாரத்திலும் செப்டம்பர் மாதம் முதல் அமுல் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. முதல் ஆண்டில் கீழ்க் காணும் பரப்பளவு இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டு, நற்பலனை அடைந்துள்ளனர்.

வட்டாரம்	புகையிலை பரப்பளவு கொண்டு வந்தது (எக்கராவில்)	புகையிலை விவசாயிகள் பலனடைந்தவர் களின் எண்ணிக்கை.	கூட்டுறவு சங்கங் களில் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. ரூ. பை.
1. காரமடை	589.0	434	2,76,314.30
2. பவானிசாகர்	459·0	297	2,09,943.24
மொத்தம்..	1,048.0	731	4,86,257.54

சென்ற ஆண்டு, இத்திட்டம் சற்று காலதாமதமாக அமுலுக்கு வந்ததால், 2,000 எக்கராவும் கொண்டு வர வழியில்லாமல் போயிற்று. மற்ற திட்டங்களில் காட்டிய ஆர்வத்தைக்காட்டிலும் புகையிலை விவசாயிகள் இத்திட் டத்திற்கு ஆதரவு மிகவும் தந்து உதவினர். மேலும் கோவை மாவட்ட கூட்டுறவு சங்கமும், நிர்வாக அதிகாரியும் இத்திட்டம் வெற்றி பெற அவ்வப்போது தகுந்த ஆலோசனைகள் கூறியும், எல்லாவித ஒத்துழைப்பையும் நல்கியதைப் பாராட்டவேண்டும். காரமடை, பவானிசாகர் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் விவசாயிகளுக்கு மருந்துகளை உடனடியாக கிராமாந்திர சங்கங்களுக்கு விரைவில் கொடுத்துதவியதற்கு இத்திட்டம் மிகவும் கடமைப்பட்டுள்ளது. விவசாய விஸ்தரிப்பு அலுவலர் களும், கிராம நல ஊழியர்களும், கூட்டுறவு இலாகா மேற்பார்வையாளர்களும் பண்ணைத் திட்டம் (Farm-Plans etc.) மற்ற விபரங்களை உடனுக்குடன் சேகரித்து காலதாமதமின்றி விநியோகம் செய்தும், ஆலோசனை கூறியும் உதவி செய்தது பாராட்டுதற்குரியது.

1965–66-ம் ஆண்டிற்கு இத்திட்டம் நம்பியூர், சத்திய மங்கலம் வட்டாரங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு, சுமார் 4,000 எக்கராவில் (பவானிசாகர், காரமடை, நம்பியூர், சத்தி) செயல்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆகையால் விவசாயிகள் இத்திட்டத்தில் பங்கு கொண்டு, நற்பெயரை யும், நற்பயனையும் அடைய வேண்டுமென்று கோரு கிறோம்.

புதிய கிணறு வெட்ட, குழாய்கிணறு இறக்க மிக அதிகமான தண்ணீர் உள்ள நீர் ஊற்றுகள் கண்டுபிடித்துக் கொடுக்கும் நிபுணர்.

1. குழாய்கிணறு இறக்குதல் (Bore Well) புதிய கிணறு வெட்டுதல் (பழைய கிணற்றில் போரிங் குழி போட) இவைகளுக்கு அவரவர்களுடைய பூமி யில் உள்ள எல்லா நீர் ஊற்றுக்களையும் கண்டு பிடித்து அவைகளில் மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுக்கள் (Cross) சந்திக்கும் சரியான இடம் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும்.

2. ஒப்பந்தம் செய்துகொண்டு நான் காண்பிக்கும் இடத்தில் (Bore Well) குழாய் கிணறு இறக்கு பவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை தொடர்ந்து கிடைக்காவிட்டால் ரூ. 2000 வரை நஷ்டஈடு கொடுக்க நான் உத்திரவாதம் தருகிறேன்.

3. கணபதி கிராமத்தில், சென்னை மாகாணத்தில் உள்ள அநேக பிரபல வாட்டர் டிவைனர்கள், கண்டுபிடித்துக் கொடுத்த இடங்களில் (Bore Well) குழாய் கிணறு 260 அடிவரை இறக்கியும் தண்ணீரே கிடைக்காத சில தோட்டங்களிலும் நான் குறித்த இடத்தில் குழாய் கிணறு இறக்கியதில் 10 H.P. மோட்டாருக்கு போதுமான தண்ணீர் சப்ளை தொ டர்ந்து இரவு பகலாக கிடைத்திருக்கிறது.

முகவரி:—

K. கந்தசாமி,
நீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்,
S/o கிருஷ்ண கவுண்டர்,
சக்கிலிய வளவுத்தோட்டம்,
கணபதி (Post),
கோயமுத்தூர்–6.

இல்லத்தரசிகளுக்கு ஒரு வார்த்தை!

"இன்றைய அவசர நிலைமையில் பெண்களின் கடமையை உணர்ந்து பார்க்கவேண்டும். உணவுப் பழக்க வழக்கங்களில் நம்முடைய பெண்கள் மாறுதல்களை ஏற் படுத்தலாம். அன்றாட உணவில் தானிய வகைகளை பெரும் அளவில் குறைத்து, வேறு பொருள்களை படைக்க முயற்சி செய்யலாம். உணவுப் பொருள்களின் விரயத்தை தவிர்க்கவேண்டும். வசதியுள்ளவர்கள் தானிய மல்லாத பிறபண்டங்களை பெருமளவில் உபயோகிக்க முயற்சி செய்யவேண்டும். உணவைச் சேமிப்பதிலும், சிக்கனத்திலும் பெண்கள் வழிகாட்டவேண்டும்."

[10—10—65 வானொலி உரையில் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி.]

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் 1965 டிசம்பர் மாதம் கிடைக்கக்கூடிய தென்னங்கன்றுகளின் விவரம்:–

கிடைக்குமிடம்.	கன்றுகளின் எண்ணிக்கை.	ஒரு கன்றின் விலை. ரூ.பை.
1. சோழவந்தான், மதுரை மாவட்டம்.	1,000	0·90
2. பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம்.	3,000	0.90
3. புத்தாலம், கன்னியாகுமரி மாவட்டம்.	9,000	0·90
4. குடியாத்தம், வட ஆற்காடு மாவட்டம்.	4,000	0·90

1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எஸ் ஸி. (ஏஜி.), ரா. சந்தானகிருஷ்ணன், எம்.எஸ்.ஸி. (ஏஜி.), விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோயமுத்தூர்-3.)

இம் மாதத்தின் முதல் இரண்டு தினங்களில் தமிழகத்தின் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மழை பெய்தது. அடுத்த நான்கு நாட்களில் பொதுவாக வரட்சி நிலவியது. 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 7-ம் தேதியன்று சிற்சில இடங்களில் மழை பெய்தது. அடுத்த இரண்டு நாட்கள் பொதுவாக வரட்சியும் 10, 11, 12 தேதிகளில் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மழையும் இருந்தது. 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 13-ம் தேதியன்று இம் மாநிலத்தில் பரவலாக மழை பெய்தது. 14, 15, 16 தேதிகளில் தமிழகத்தில் குறிப்பிட்ட சிற்சில இடங்களில் மழை பெய்தது. 17-ம் தேதியன்று பொதுவாக வரட்சி நிலவியது. 18-ம் தேதியன்று தமிழகத்தில் பரவலாக மழை பெய்தது. 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 19-ம் தேதியிலிருந்து மாத இறுதி வரை சிற்சில இடங்களில் ஆங்காங்கு மழை பெய்தது. ஆனுல் 28, 29 தேதிகளில் மட்டும் பொதுவாக வரட்சி நிலவியது.

இம் மாதத்தில் பகல் வெப்பநிலையில் பெருத்த மாறுதல்கள் எதுவும் இல்லை.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்:—செங்கல்பட்டு மாவட்டத்தில் இம் மாதம் போதிய மழையில்லை. திரூர் பகுதியில் பெய்த மழையினுல் அறுவடைக்குத் தயாரான சொர்ணவாரி பயிரும், களையெடுப்புக்கான மேல் நில நெற்பயிரும் காயப்போட வேண்டிய வைக்கோலும் பாதிக்கப்பட்டன. பயிர்கள் பூச்சி, நோயினுல் பாதிக்கப்படவில்லை. அவைகள் கதிர்விடும் பருவத்தில் இருந்தன. தென் ஆற்காடு மாவட்டத்தில் போதிய மழையிருந்தது. திண்டிவனத்தில் பெய்த மழை புன்செய் நிலப் பயிர்களுக்கு களை எடுக்க உதவியது. நிலக்கடலைப் பயிரில் சிறிதளவு சுருள் பூச்சியும் வேர் அழுகல் நோயும் காணப்பட்டன.

வட ஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தத்தில் பெய்த மழையால் வளரும் கரும்பு, நெல், நிலக்கடலை பயிர்கள் பயன் அடைந்தன. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை, நாகப்பட்டினம், பட்டுக்கோட்டை பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யவில்லை. குறுவை பயிர் அறுவடை செய்யவும் நெல்மணிகள் உலர்வதற்கும் வரண்ட சீதோஷ்ணம் உதவியது. குருவை பயிரில் கொள்ளை நோயும் இலைப்புள்ளி நோயும் காணப்பட்டன. சம்பா பயிரில் துளைப்பான்களும், தாளடியில் திரிப்ஸும் காணப்பட்டன. பட்டுக்கோட்டையில் நிலவிய குளிர்ந்த சீதோஷ்ணத்தால் கோ. 25 நெல் நாற்றங்கால்களில் இலைப்புள்ளி நோயும், மாவுப்பூச்சிகளும் பரவலாக காணப்பட்டன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் போதிய மழை பெய்யவில்லை.

மதுரை மாவட்டத்தில் போதிய மழையிருந்தது. பெரியகுளம் பகுதியில் சாமை, பருத்தி பயிர்கள் விதைக்கப்பட்டன. நீண்டகால நெற்பயிருக்கான நாற்றங்கால்கள் தயாரிக்கப்பட்டன. இம்மாத இறுதியில் நிலவிய குளிர்ந்த சீதோஷ்ணத்தால் நிலக்கடலையில் கம்பளிப்புழுவும், நெற்பயிரில் கொள்ளை நோயும் காணப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் போதிய மழையில்லை. சங்கரன்கோவில் பகுதியில் பெய்த மழை நெல், ராகி, நிலக்கடலை பயிர்களுக்கு உதவிற்று. அம்பாசமுத்திரம் பகுதியில் நிலவிய வரண்ட சீதோஷ்ணம் அறுவடைக்கு உதவியது. ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையளவு மிதமாக இருந்தது. பரமகுடி தாலுகாவின் தென்மேற்கு பகுதியிலும், முதுகுளத்தூர் பக்கத்திலும் மழை அதிக அளவு பெய்தது. வளரும் நெல், நிலக்கடலை, சிறுதானியப் பயிர்கள் இதனுல் பலனடைந்தன. கமுதி வட்டாரத்தில் நிலக்கடலையில் கம்பளிபுழுக்கள் காணப்பட்டன.

கன்யாகுமரி மாவட்டத்தில் மழையளவு குறைவாக இருந்தது. நீண்டகால வரட்சியினுல் மாமரங்களின் இலை வளர்ச்சியும் பூப்புத்திறனும் இம் மாதம் குறைந்து காணப்பட்டன. திருப்பதிசாரம் வட்டாரத்தில் ASD–1 கட்டி சம்பா நெற்பயிர் வரட்சி காரணமாக முன்னதாகவே அறுவடைக்கு வந்தது. சேலம் மாவட்டத்தில் மழையளவு குறைந்திருந்தது. நிலக்கடலைப் பயிரும், ஆமணக்கு பயிரும் சிறிதளவு பெய்த மழையால் பயனுற்றன. நிலக்கடலைப் பயிரில் கம்பளிப் புழுவும், தென்னந்தோப்புகளில் கருப்புதலை கம்பளிப் புழுவும் காணப்பட்டன. நாமக்கல் பகுதியில் குளிர்கால பாசனமற்ற MCU 1, பருத்தியும், பாசன MCU–3 பருத்தியும் விதைக்கப்பட்டன. பாசனமற்ற நிலக்கடலை, ராகி, சோளம் பயிர்கள் மழையின்மையால் வாட்டமுற்றன. நெற்பயிரில் அசுவினியும் நாவாய்ப் பூச்சிகளும் காணப்பட்டன. பருத்தியில் அசுவினியும் திரிப்ஸும் மிதமாகத் தாக்கின.

கோயமுத்தூர் மாவட்டத்தில் மழை குறைவாக இருந்தது. நெற்பயிர் நடவும், பருத்தி விதைப்பும் ஆங்காங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நெற்பயிர் நாற்றங்கால்களில் திரிப்ஸும் நிலக்கடலையில் சுருள் பூச்சியும் இலைப்புள்ளி நோயும் தக்காளி, கத்தரிக்காய் போன்ற காய்கறி பயிர்களில் காய்துளைப்பான்களும் காணப்பட்டன. ஆவியார்நகர் வட்டாரத்தில் இம்மாத இறுதியில் பெய்த மழை வளரும் பருத்தி, நிலக்கடலை, மிளகாய் பயிர்களுக்கு உகந்ததாயிருந்தது. நீலகிரி மாவட்டத்தில் போதிய அளவு மழை பெய்தது. நஞ்சநாடு வட்டாரத்தில் பெய்த மழை குளிர் கால உருளைக்கிழங்குப் பயிர் நடவுக்கு உகந்ததாயிருந்தது. உதகமண்டலத்தில் பெய்த மழை புல்வெளிகளுக்கு மிகவும் பயன்பட்டது.

இம் மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் பின் வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழையளவுகள்

(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	பெய்த மழை
(1)	(2)	(3)	(4)
1	14-9-1965	திரூர்குப்பம்	2·09
2	18-9-1965	திண்டிவனம்	3·28
3	13-9-1965	குடியாத்தம்	2·10
4	25-9-1965	உதகமண்டலம்	2·15
5	25-9-1965	மதுரை	2·48

பிராந்திய மழையளவுகள்

(அங்குலத்தில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	செப்டம்பர் மாத மழை யளவு.	சராசரியி லிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
1	வட பிராந்தியம்	4·4	—1·7	குறைவு
2	கீழ்க்கரைப் பிராந்தியம்	2·6	—2·1	மிகக் குறைவு
3	மத்தியப் பிராந்தியம்	1·5	—1·9	ஷெ
4	தென் பிராந்தியம்	1·8	—0·2	சிறிது குறைவு
5	மலைப் பிராந்தியம்	3·2	—1·7	குறைவு

அதிக மகசூலால் அதிக் வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம் :
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், கலை நாசினிகள்
கிடைக்குமிடம் :—
ராஜா பண்ணைத் தோட்டம்
3, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி : RAJSEED போன் : 42262

1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத

மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர்.	இம்மாத மழை யளவு.	சராசரியி லிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை யளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்.			
சென்னை (மீனம்பாக்கம்).	1·6	—3·1	17·1
திரூர் குப்பம்*	7·3	+1·1	21·1
வேலூர்	2·6	—4·2	17·4
குடியாத்தம்*	5·9	—0·6	17·2
கீழ்கரைப் பிராந்தியம்.			
பாலூர்*	3·4	—1·2	22·3
திண்டிவனம்*	7·0	+2·5	24·1
கடலூர்	0·4	—4·8	17·2
நாகப்பட்டினம்	1·1	—2·2	13.6
ஆடுதுறை*	1·2	—4·5	17.8
பட்டுக்கோட்டை * ..	2·6	—2·1	17.0
மத்தியப் பிராந்தியம்.			
சேலம்	0·8	—5·3	18·8
சேலம்*	3·1	—2·9	21·2
கோயமுத்தூர்* ..	2·0	+1·1	11·7
கோயமுத்தூர் ..	0·2	—1·4	6·3
ஆளியார் நகர்*	0.4	—1·6	9·7
திருச்சிராப்பள்ளி ..	2·4	—1·5	17·4
தென் பிராந்தியம்.			
மதுரை	7·0	+2·2	14·3
பாம்பன்	1·7	—0·6	8·2
கோவில்பட்டி*	2·7	+0·4	14·1
பாளையங்கோட்டை ..	0·8	—0·4	6·8
அம்பாசமுத்திரம்* ..	0·1	—0·8	7·3
நாகர்கோவில்*	0·1	—2·6	20·0
கன்னியாகுமரி* ..	0·3	—1·1	10·2
மலைப் பிராந்தியம்.			
கோடைக்கானல் ..	1·6	—3·1	32·5
கூனூர் *	1·0	—3·9	25·7
உதகமண்டலம்* ..	5·1	+0·4	25·7
நஞ்ச நாடு*	5·0	—0·1	29·9

குறிப்பு.—* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

கடலூர் தீவிர மணிலா உற்பத்தி பகுதியை முதல் அமைச்சர் திரு M. பக்தவத்சலம் அவர்கள் பார்வையிட்ட போது எண்ணெய் வித்துக்கள் பெருக்க அலுவலர் திரு B. சீனிவாசராவ், தீவிர சாகுபடி முறைகளால் உண்டான நன்மைகளை முதல் அமைச்சருக்கு விளக்குகிறார்.



28—9—65 அன்று அடையாறு அவ்வை இல்லத்தில் நடந்த 'காய்கறித் தோட்டப் போட்டி' பரிசளிப்பு விழாவின் போது அமைக்கப்பட்டிருந்த காய்கறிக் காட்சியைப் பற்றி விவசாய கூட்டு நெறியாளர் திரு பசுலுல்லாகான், விவசாய அமைச்சர் திரு P. கக்கன் அவர்களுக்கு விளக்குகிறார்.

காய்கறித் தோட்டப் போட்டி' யின் முதற் பகுதியில், முதற் பரிசு பெற்றவருக்கு, விவசாய அமைச்சர் திரு P. கக்கன் அவர்கள் பரிசளிக்கிறார்கள்.



Registered No. M-4646.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1965

சிவப்புக் கம்பளிப் பூச்சியை அழிக்க விமானம் மூலம் மருந்து தெளித்தல்

நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப்பூச்சியினால் ஏற்படும் சேதத்தைக் கட்டுப்படுத்த இந்திய அரசினரின் உதவியுடன் மாநில அரசினரால் பரந்த அளவில் பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 'சிவப்புக் கம்பளிப்பூச்சி ஒழிப்பு திட்டத்தின்' கீழ் பொள்ளாச்சி, விழுப்புரம் போன்ற இடங்களில் சென்ற சில வருடங்களாக விமான மூலம் மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் அரசினரால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வருடமும் விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது.

தென் ஆற்காடு, மயிலம் வட்டாரத்தைச் சேர்ந்த பெரமண்டூர் கிராமத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் விமானம் மூலம் மருந்து தெளிப்பதை இந்த இதழ் அட்டையில் பார்க்கலாம்.

சிவப்புக் கம்பளிப்பூச்சியை முழுதும் கட்டுப்படுத்த பின்வரும் முறைகளையும் விவசாயிகள் கையாள வேண்டும்.

* நிலம் தயாரிக்கும் போது ஆழமாக உழுது கூட்டுப்புழுக்களை சேகரித்து அழிக்கவேண்டும்.

* மழை பெய்த பின்னர் இரவில் விளக்குப் பொறிகள் வைத்து அந்துப் பூச்சிகளைப் பிடித்து அழிக்க வேண்டும்.

* இலைகளிலுள்ள முட்டைகளைச் சேகரித்து அழிக்க வேண்டும்.

* சிறு பூச்சிகளை அழிக்க ஏக்கருக்கு 20—30 ராத்தல் பி.எச்.சி. 10 சதம் மருந்து தூவவேண்டும்.

* வளர்ந்த புழுக்களுக்கு பாலிடால் அல்லது என்ட்ரின் தெளிக்கவேண்டும்.

* சிவப்புக் கம்பளிப்பூச்சியை அறவே அழிக்க விவசாயிகளின் கூட்டுமுயற்சி பெரிதும் தேவை.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு
விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு
விவசாயத் துறை நெறியாளரால்
வெளியிடப்பட்டது.